# சுபீட்சம்

SUPEEDSAM
EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

திங்கட்கிழமை 27.09.2021

supeedsam.com supeedsam@gmail.com





# பயங்கரவாத தடைச் சட்ட நீக்கத்தை ஐரோப்பிய குழுவிடம் வலியுறுத்துவோம்

நாட்டிற்கு வரும் ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழு செவ்வாய் க்கிழமை தமிழ் தேசியக்கூட்டமைப்பை சந்திக்கின்றபோது பயங்கரவாத தடைச்சட்டத்தினை முற்றுமுழுதாக நீக்க வேண்டும் என்பதனை நாம் வலியுறுத்துவோம் என யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் பேச்சாளருமான எம். ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...



## தமிழ் தேசிய கூட்டமைப்பின் வீரம் வாய் பேச்சில் மட்டுமே தமிழ் மக்களுக்கு அபிவிருத்தி செய்வது எமது அரசாங்கமே



(திருக்கோவில் சுபீட்சம் நிருபர்)

நாட்டில் யுத்தத்தை முடித்து தமிழ் பிள்ளைகளின் கைகளில் பேனாவையும் பத்தையும் கொடுத்து தமிழர் பிரதேங்களில் கல்வி பொருளாதார அபிவிருத்திகளை ஏற்படுத்திக் கொடுத்தவர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷதான் என இராஜாங்க அமைச்சர் விமல வீர திஸாநாயக்கா திருக்கோவிலில் இடம்பெற்ற அபிவிருத்தி குழு கூட்டத்தில் தெரிவித்து இருந்தார்.

திருக்கோவில் பிரதேச செயலகத்தில் நேற்று மாலை இடம்பெற்ற வாழ்வாதார ஒருங்கிணைப்பு உப குழு கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இராஜாங்க அமைச்சர் மேற்படி கருத்தினை தெரிவித்து இருந்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்; தமிழ் மக்கள் வாக்களித்து தமிழ் தேசிய கூட்டமைப்பினரை பாராளுமன்றத்துக்கு அனுப்புகின்ற

02 ஆம் பக்கத்தில்...

## ஞானசார தேருக்கு எதிராக ஆறு முஸ்லிம் எம்.பிக்கள் போலிஸில் முறைப்பாடு



(நூருள் ஹுதா உமர்)

முஸ்லிங்கள் மீது அவதூறு பரப்பும் விதமாகவும் இறைவனை நிந்திக்கும் விதமாகவும் சிங்கள தனியார் ஊடகமொன்றின் அரசியல் விவாத நிகழ்ச்சியில் கருத்து தெரிவித்த

02 ஆம் பக்கத்தில்...

## சிறைச்சாலை விவகாரம் இன ரீதியானதல்ல

### கைதிகள் புரிந்துள்ளதாக நீதி மைச்சர் தேரிவிப்பு



(காந்தன்)

இராஜங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தை, அனுராதபுரம் சிறைச்சாலையில் தம்மை முழந்தாழிடச் செய்து துப்பாக்கி முனையில் அச்சுறுத்திய சம்பவமானது இன ரீதியாக மேற்கொள்ளப்பட்ட ஒன்று அல்லவென தமிழ் அரசியல் கைதிகள் புரிந்துகொண்டுள்ளதாக அரசாங்கம் கூறியுள்ளது.

இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தை, தமிழ் அரசியல் கைதிகளை

02 ஆம் பக்கத்தில்...

## பேரமுனவின் தேசிய பட்டியல் பஷீருக்கு வழங்கப்படுவது இன நல்லுறவை கட்டியெழுப்புவதற்கான சமிக்ஞை ஆகும்

### அனைத்து கட்சி செயற்பாட்டாளர் ஒன்றியம் வலியுறுத்து

( தர்மேந்திரா)

பெரமுனவின் கிழக்குக்கான தேசிய பட்டியல் உற்பத்தி திறன் ஊக்குவிப்பு முன்னாள் அமைச்சர் பஷீர் சேகு தாவூத்துக்கு வழங்கப்படுவது இரட்டிப்பு மகிழ்ச்சியை தரும் என்று அம்பாறை மாவட்டத்தை தளமாக கொண்டு இயங்குகின்ற அனைத்து கட்சி செயற்பாட்டாளர்கள் ஒன்றியத்தின் தலைவர் முஹமட் முஸ்தபா முஹமட் நிசாம் தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...

## ஓட்டமாவடி மஜ்மா நகர் மையவாடி கூட்டம் போலிஸாரின் தலையீட்டால் இரத்து

(சுபீட்சம் நிருபர்)

மட்டக்களப்பில் கொரோனா தொற்றினால் மரணிப்பவர்களின் உடல்களை நல்லடக்கம் செய்யும் ஓட்டமாவடி மஜ்மா நகரில் நிலவும் இடப்பற்றாக்குறை தொடர்பாக கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த

02 ஆம் பக்கத்தில்...

## பன்றியுடன் சேரும் கன்றும் பவ்வி அருந்தும்

### லொகானின் மட்டு விஜயம் குறித்து ஜனா



(துதிமோகன்)

எமது தமிழ் அரசியற் கைதிகளை அச்சுறுத்தி, அவமானப்படுத்திய லொஹான் ரத்வத்தயின் பாதணியை நீங்கள் நக்குவதற்காகவா அவரை மட்டக்களப்பு மாவட்டத்திற்கு அழைத்து வந்தீர்கள் என்ற கேள்வியையே ஒட்டுமொத்த தமிழ் மக்களும் கேட்கின்றார்கள் என தமிழீழ விடுதலை

02 ஆம் பக்கத்தில்...







## திலீபனின் நினைவேந்தல் யாழ்.பல்கலைக்கழகத்திலும் அஞ்சலி


(யாழ்.கீதன்)

தியாக தீபம் திலீபனுக்கான நினைவேந்தல் நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களினாலும் அனுஷ்டிக்கப்பட்டது.

பிரத்தியேகமான இடமொன்றில் தியாகதீபம் திலீபனின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி, மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலிக்கப்பட்டது.

1987 செப்டெம்பர் 15 ஆம் திகதி, ஐந்து

02 ஆம் பக்கத்தில்...









## இன்று இலங்கை வருகிறது ஐரோப்பிய ஒன்றிய குழு

இலங்கைக்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு ஐரோப்பிய ஒன்றியத்தின் ஐவர் அடங்கிய குழுவொன்று இன்று திங்கட்கிழமை நாட்டிற்கு வரவுள்ளது.

இந்த விஜயத்தின் போது, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் நிதி அமைச்சர் பஷில் ராஜபக்ஷ உட்பட அரசாங்கப் பிரதிநிதிகள், எதிர்க்கட்சித்தலைவர், எதிர் அணியில் உள்ள கட்சிகளின்

02 ஆம் பக்கத்தில்...

# பன்றியுடன் சேரும் கன்றும்பவ்வி அருந்தும்

இயக்கத்தின் செயலாளர் நாயகமும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினருமாகிய கோவிந்தன் கருணாகரம் ஜனா தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்ற உறுப்பினரின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 25ம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்திற்கு கரும்புள்ளி ஏற்படடிருக்கின்றது. அண்மையில் சில நாட்களாக இலங்கையிலே குறிப்பாகத் தமிழ் மக்கள் மத்தியில் பெயர் அடிபட்டவர் மட்டக்களப்பிற்கு வருகை தந்து பொதுஜன பெரமுன கட்சி அலுவலகத்திலே இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன், கட்சியின் மாவட்ட அமைப்பாளர் சந்திரகுமார் ஆகியோருடன் இணைந்து அவரது கட்சி அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றார்.

தகவல்களின் அடிப்படையில் அநுராதபுரம் சிறைச்சாலைக்கு நிறை வெறியுடன் சென்று தமிழ் அரசியற் கைதிகளைத் தன் முன் முழந்தாழிட வைத்து தனது கைத்துப்பாக்கியை அவர்களின் தலையில் வைத்து அச்சுறுத்திய அமைச்சர் லொஹான் ரத்வத்த கைதிகளை அச்சுறுத்தியத்தற்கும் மேலாக தனது பாதணிக் கால்களை நக்கும்படி செய்து அவமானப்படுத்தியவரை இந்த மட்டக்களப்பு மண்ணிற்கு அழைத்து வந்து, அவருடன் இணைந்து சந்திப்பை நடத்தியது ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் அவமதிக்கும் ஒரு செயலாகவே பார்க்கின்றேன்.

லொஹான் ரத்வத்தயின் தகப்பனாடர் அனுரத்த ரத்வத்த நான் பாராளுமன்றத்திலே இருந்த 1989ம் ஆண்டு காலகட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர். ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கு மிகவும் நெருக்கமானவர். சந்திரிக்காவின் ஆட்சிக் காலத்திலே நான் நினைக்கின்றேன் பாதுகாப்பு அமைச்சராகவும் இருந்தவர். 1988ம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலிலே பிரேமதாசாவை எதிர்த்துப் போட்டியிட்ட ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கு ஆதரவு கேட்டு தமிழீழ விடுதலைப் புலிகளை நேரடியாகச் சென்று சந்தித்தவர்.

தந்தை தேர்தலில் வெல்வதற்கு தமிழ் மக்களின் ஆதரவு வேண்டும். ஆனால் மகன் இராஜாங்க அமைச்சராக இருந்துகொண்டு தமிழ் அரசியற் கைதிகளை அவமானப்படுத்துகின்றார்.

2010ம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது கூட கண்டியிலே பதினொரு முஸ்லிம் இளைஞர்களைச் சுட்டுக் கொண்ட சம்பவத்தில் தகப்பன் மகன் இருவரும் சம்பந்தப்பட்டவர்களாகத் தகவல்கள் இருக்கின்றன. அந்த பரம்பரைச் செயல்களினூடாகவே அரசியல் நடத்துபவர், தற்போது தமிழ் அரசியற் கைதிகளைத் தன் அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி தனது பாதணியை நக்க வைத்துள்ளார்.

நான் பொதுவாக அரசியல்வாதிகளைத் தனிப்பட்ட ரீதியில் விமர்சிப்பவன் அல்ல. ஆனாலும் நானும் ஆயுதப் போராட்டத்தில் இருந்து, அதனூடாக அரசியலுக்குள் வந்தவன் என்ற அடிப்படையில் எனது இரத்தம் கொதிக்கின்றது. அதனால்தான் எனது கருத்துக்கள் இவ்வாறு அமைகின்றது.

மேற்சொன்னவாறு எமது தமிழ் அரசியற் கைதிகளை அச்சுறுத்தி, அவமானப்படுத்திய லொஹான் ரத்வத்தயின் பாதணியை நீங்கள் நக்குவதற்காகவா அவரை மட்டக்களப்பு மாவட்டத்திற்கு அழைத்து வந்தீர்கள் என்ற கேள்வியையே ஒட்டுமொத்த தமிழ் மக்களும் கேட்கின்றார்கள். லொஹான் ரத்வத்த ஒரு கனவான் அரசியல்வாதியல்ல, கழிவு அரசியல்வாதி. அந்தக் கழிவு அரசியல்வாதியை மட்டக்களப்பிற்குக் கொண்டு வர வேண்டாம்.

அவருக்காக பாராளுமன்றத்திலும் வெளியிலும் குரல் கொடுப்பவர்கள் இருவர். ஒருவர் பொலிஸிற்குப் பொறுப்பானவர். சரத் வீரசேகர கூறுகின்றார். அவர் கையில் வைத்திருந்தது அனுமதிப்பத்திரம் உள்ள துப்பாக்கியாம், அனுமதிப்பத்திரம் வைத்துள்ள துப்பாக்கி என்றால் கொலை அச்சுறுத்தல் விடலாமா? இல்லை கொலை தான் செய்யலாமா?

அவருடன் இணைந்து லொஹானுக்கு ஆதரவு கொடுக்கும் மற்றையவர் விமல் வீரவன்ச. இலங்கையில் முதற்தர இனத்துவேசி. அவர் சிறைச்சாலை அமைச்சராக இருந்து செய்த குற்றத்திற்காகவே அவரது இராஜாங்க அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்திருக்கின்றார். அவர் வகிக்கும் ஏனைய பதவிகளை இராஜினாமா செய்ய வேண்டாம் என்கின்றார். அங்கும் ஏதாவது நடக்க வேண்டும். அதன் பின்னர் தான் அதிலிருந்தும் அவரை இராஜினாமா செய்ய வைப்பார்கள் என்று நினைக்கின்றேன்.

இலங்கையின் நீதி அமைச்சர் கடந்த பாராளுமன்றத்திலே சம்பந்தப்பட்டவர்களிடமும், சம்பந்தப்பட்டவர்களது குடும்ப உறுப்பினர்களிடமும் பகிரங்கமாக மன்னிப்புக் கோருகின்றார். ஒரு ஓய்வுபெற்ற நீதிபதி அவர்களது தலைமையில் இந்தச் சம்பவம் சம்மந்தமாக விசாரிப்பதற்கான குழுவை நியமித்து விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அந்த இராஜாங்க அமைச்சரை மட்டக்களப்பிற்கு அழைத்து வந்து மாலை அணிவித்து நீங்கள் அவரை நல்லவராகக் காட்ட முற்படுகின்றீர்கள்.

இது மாபெரும் தவறு என்பதுடன், பன்றியுடன் சேரும் கன்றும் பவ்வி அருந்தும் என்ற பழமொழிக்கேற்றால் போலான வேலையையே செய்துள்ளீர்கள் என்பதை மிகவும் மனவருத்தத்துடன் கூறிக் கொள்கின்றேன். இவ்வாறான செயற்பாடுகளை இத்துடன் நிறுத்திக் கொள்ளுங்கள். எதிர்காலத்திலும் செய்து விடாதீர்கள் என்று தெரிவித்தார்.

# இன்று இலங்கை வருகிறது

தலைவர்கள், சிவில் சமூகத்தினர், தொழிற்சங்க பிரதிநிதிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரையும் சந்தித்து குறித்த குழு கலந்துரையாடவுள்ளது.

குறித்த குழு இலங்கையின் நிலைமைகளை நேரில் ஆய்வு செய்து ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையை வழங்குவதா இல்லையா என அறிக்கையொன்றை தயாரித்து ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றில் சமர்ப்பிக்கவுள்ளது.

# திலீபனின் நினைவேந்தல்

அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து அவர் உணவுத்தவிர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்திருந்தார்.

எனினும், அவரது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத நிலையில், 198%ஆம் ஆண்டு செப்டெம்பர் 26 ஆம் திகதி முற்பகல் 10.48க்கு அவர் உயிர்நீத்தார். இவ்வாறு அவர் உணவுத் தவிர்ப்பில் ஈடுபட்டு மறைந்த காலப்பகுதி வருடாந்தம் அவருக்கான நினைவேந்தல் வாரமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வை நடத்துவதற்கு நீதிமன்றங்கள் தடைவிதித்துள்ள நிலையில், தடைகளையும் தாண்டி திலீபனுக்கு, யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர்களால் அஞ்சலி செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஓட்டமாவடி மஜ்மா நகர் மையவாடி

கூட்டம் பொலிஸாரின் தலையீட்டால் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.நௌபர் தெரிவித்தார்.

ஓட்டமாவடி பிரதேச சபையில் இந்த கூட்டம் நேற்றுக் காலை 10 மணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டதையடுத்து இக் கூட்டத்தில் பல பிரமுகர்கள் கலந்துகொண்டு கூட்டம் ஆரம்பமாக இருந்த சில நிமிடங்களுக்கு முன்னர் அங்கு வந்த வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன தலைமையிலான பொலிஸ் குழுவினர், கொரோனா தொற்று பரவல் காரணமாக ஒன்று கூடுவதை தவிர்க்க வேண்டும் எனவே கூட்டத்தை நடத்த வேண்டாம் என்றும் கூட்டத்துக்கு வந்தர்களை கலைந்து செல்லுமாறும் கூறினர்.

இதனையடுத்து இக் கூட்டம் இரத்து செய்யப்பட்டதுடன் அங்கு வந்திருந்த பிரமுகர்கள் கலைந்து சென்றனர்.

# சிறைச்சாலை விவகாரம் இன ரீதியானதல்ல

அச்சுறுத்திய சம்பவம் தொடர்பான விசாரணைகளில் தேவையற்ற அழுத்தங்கள் பிரயோகிக்கப்படவில்லை என நீதி அமைச்சர் அலிஷப்ரி தெரிவித்துள்ளார்.

நீதி அமைச்சர் அலி ஷப்ரி, அனுராதபுரம் சிறைச்சாலைக்கு நேற்று கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டிருந்ததுடன், தமிழ் அரசியல் கைதிகளை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர், இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தை தொடர்புபட்ட சம்பவம் சிறைச்சாலையில் இடம்பெற்றது என்பதை யாரும் மறுக்கவில்லை எனக் கூறியுள்ளார். மனித உரிமைகள் ஆணைக்குழு, தமிழ் தேசிய கூட்டமைப்பு மற்றும் ஏனைய எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்த போது, சிறைச்சாலை அதிகாரிகளோ அல்லது வேறு தனிநபர்களோ அழுத்தங்களை பிரயோகித்தார்களா என்பது தொடர்பில் தமிழ் அரசியல் கைதிகளிடம் விசாரித்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் யாரும் தமக்கு அழுத்தம் கொடுக்கவில்லை என தமிழ் அரசியல் கைதிகள் தம்மிடம் கூறியதாகவும் நீதி அமைச்சர் அலிஷப்ரி மேலும் கூறியுள்ளார். ஆகவே இந்த சம்பவத்தை அரசியல் ஆக்க வேண்டிய தேவையில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.




# பெரமுனவின் தேசிய பட்டியல் பஷீருக்கு வழங்கப்படுவது இன

காரைதீவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஊடகவியலாளர்களை சந்தித்து இது தொடர்பாக பேசியபோது இவர் மேலும் தெரிவித்தவை வருமாறு

பெரமுனவின் தேசிய பட்டியல் ஒன்று கிழக்கு மாகாணத்தை சேர்ந்த முஸ்லிம் அரசியல் பிரமுகர் ஒருவருக்கு வழங்கப்படுகின்றது என்று;நாம் அறிகி'ன்றோம். ராஜபக்ஸக்களின் மனங்களில் இடம் பிடித்த முஸ்லிம் தலைவராக பஷீர் சேகு தாவூத் உள்ளார் என்று நாம் விசுவாசிக்கின்றோம்.

பஷீர் சேகு தாவூத் ராஜபக்ஸக்களின் மனங்களில் மாத்திரம் அல்லது பெரும்பான்மை சிங்கள மக்களின் மனங்களிலும் இடம் பிடித்து இருப்பவர் ஆவார். அதே போல தமிழ் மக்களால் பெரிதும் நேசிக்கப்படுபவரும் ஆவார். இன நல்லுறவுக்கான உறவு பாலமாக விளங்குபவர் ஆவார்.

இவருக்கு தேசிய பட்டியல் வழங்கப்படுவதை கிழக்கு மாகாணத்துக்கு உள்ளேயும், வெளியேயும் உள்ள எல்லா இன மக்களும் வரவேற்பார்கள் என்பது திண்ணம். அதுவே எமது எண்ணமும் ஆகும்.

பெரமுனவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஸ மிக சிறந்த வியூகி ஆவார். தேசிய பட்டியலுக்கான தீர்மானத்திலும் அவரின் நிலைப்பாடு என்பது தெளிந்த சிந்தனை, தீர்க்கதரிசனம், தூர நோக்கு ஆகியவற்றை கொண்டதாகவே நிச்சயம் இருக்க முடியும். மிக பொருத்தமான தீர்மானம் எடுக்கப்படுவதற்கு அவரின் குரல் ஓங்கி ஒலிக்க வேண்டும்.

சிங்கள மக்களால் விரும்பப்படாத, தமிழ் மக்களால் ஏற்று கொள்ளப்படாத எவருக்கும் இப்பதவி வழங்கப்படும் என்று நாம் நினைக்கவில்லை. அர்சாங்கம் மீண்டும் ஒரு சர்ச்சைக்குள் மாட்டுப்பட கூடாது என்பதுடன் இப்பதவி இன நல்லுறவை கட்டி எழுப்புவதற்கான நல்லெண்ண சமிக்ஞையாக அமைதல் வேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம்.

# ஞானசார தேரருக்கு எதிராக ஆறு முஸ்லிம் எம்.பிக்கள் பொலிஸில்

பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகட அத்தே ஞானசார தேரருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க கோரி முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், பைசல் காசிம், அல்ஹாபிழ் இசட். நஸீர் அஹமட், எம்.எஸ். தௌபீக், அலிசப்ரி ரஹீம், சட்டத்தரணி முஸாரப் முதுநபின், இசாக் ரஹ்மான் ஆகியோர் பொலிஸ் தலைமையகம் மற்றும் குற்றப்புலனாய்வு பிரிவு பணிப்பாளர் ஆகியோரிடம் முறைப்பாடொன்றை பதிவு செய்துள்ளார்கள்.

ஞானசார அண்மையில் சிங்கள ஊடகத்திற்கு கருத்து தெரிவிக்கையில் கடந்த ஈஸ்டர் குண்டு தாக்குதல் நடத்திய குழு மற்றும் அவர்களை அந் நடவடிக்கையில் ஈடுபட தூண்டிய விடயம் சில குர்ஆனின் போதனைகளாக இருப்பதுடன் அவர்கள் வணங்கும் இறைவனான அல்லாஹ் தான் இதற்கு முழுக்காரணம் என்று இறைவனை நிந்திக்கும் விடயம் பாரதூரமானது இதனால் முஸ்லிம்கள் கொதிப்படைந்துள்ளனர்.

எனவே இந்த விடயத்தை செய்த ஞானசார தேரருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற நோக்கில் குறிப்பாக மக்களை குழப்பி மத நிந்தனை செய்துள்ள இந்த குற்றச் செயலுக்கு ஐஇஇகசீ சட்டத்தின்கீழ் ஞானசாரவை கைது செய்து தண்டிக்க வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர்கள் பொலிஸ்மா அதிபர் மற்றும் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

இது விடயம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது கடந்த காலங்களில் ஞானசார தேரர் சமூகத்திற்கு எதிராக செயற்பட்டதற்கு அமைய சட்ட ரீதியாக அணுகி அவர் தண்டிக்கப்பட்டார். அதேபோன்று இவ்விடயம் சம்பந்தமாக தாங்கள் நாட்டின் முக்கிய உலமாக்கள் சட்டத்துறை விற்பன்னர்கள் சமூக நல வாதிகள் ஆகியோருடன் கலந்துரையாடினோம். அவர்கள் கூறிய ஆலோசனை இது சம்பந்தமாக பாராளுமன்றத்தில் கடுமையான முறையில் விவாதிக்கும்போது ஞானசாரருக்கு சார்பாக சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இதை பாரிய சிங்கள முஸ்லிம் குழப்பத்திற்கு கொண்டுபோக முடியும். எனவே இவ்வாறான சூழ்நிலையை விட இறைவனுக்கு செய்த நிந்தனையையும் முஸ்லிம் மக்களுக்கு அச்சுறுத்தலாக செயற்படும் இந்த ஞானசாரவை சட்டத்திற்கு முன் நிறுத்தி தண்டனை வழங்க நடவடிக்கை எடுப்பது நல்லது என்று ஆலோசனை வழங்கியுள்ளனர்.

அந்த அடிப்படையிலேயே மிக நிதானமாகவும் சமூக பொறுப்புடனும் இவருக்கு நடவடிக்கை எடுக்க பொலீசாரை அனுகியுள்ளோம். இது விடயமாக மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரவை சந்தித்து பேசியுள்ளதுடன் இவருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி அதற்கான துரித நடவடிக்கை எடுக்க பொலிசாரை பணிக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளோம். மேலும் நாடு திரும்பியவுடன் ஜனாதிபதியை சந்தித்து ஞானசார தேரர் இந்த நாட்டில் சமூகங்களிடையே பெரும் குழப்பத்தை உருவாக்க முயற்சிப்பதை சுட்டிக்காட்டி ஞானசாரருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்துவதற்கும் தீர்மானித்துள்ளோம்.

குறிப்பாக முஸ்லிம் சமூகம் சம்பந்தமாகவும் முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக யார் செயல்ப்பட்டாலும் எதற்கும் அஞ்சாது இதயசுத்தியுடன் சமூகம் பாதுகாப்பாக அச்சமின்றி வாழக்கூடிய சூழலை இந்நாட்டில் உருவாக்க முயற்சிப்போம் என்பதை எமது சமூகம் உணர்ந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தமிழ் தேசிய கூட்டமைப்பின் வீரம் வாய் பேச்சில் மட்டுமே

போதிலும் அவர்கள் அங்கு வீர வசனங்களை மட்டும் பேசிக்கு கொண்டு தமிழ் மக்களுக்கு பச்சத் தண்ணீரும் கொடுக்க முடியாமல் இருக்கின்றார்கள். நாமே அவர்களுக்கான அபிவிருத்திகளை முன்னெடுத்து வருகின்றோம். இதனை தமிழ் மக்கள் புரிந்து கொண்டு எதிர் காலத்தில் சிந்தித்து செயற்பட வேண்டும்

இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கு உதவி செய்கின்ற ஒரு அரசியல் தலைவராக மஹிந்த ராஜபக்ஷவே காணப்படுகின்றார். என தெரிவித்து இருந்த இராஜாங்க அமைச்சர் விமல வீர திஸாநாக்க முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இலட்சக் கணக்கான நிதிகளை ஆட்சிக்கு வரும் அரசுகளிடம் இருந்து பெற்றுக் கொண்டு தமது மக்களுக்கு அபிவிருத்தி செய்து வருகின்ற போதிலும் தமிழ் தேசிய கூட்டமைப்பு தமிழ் மக்களை ஏமாற்றிக் கொண்டு காலத்தை கடத்துவதே வேலையாக கொண்டுள்ள போதிலும் தமிழ் மக்களுக்கு எமது அரசாங்கம் தான் உதவி செய்து வருகின்றது.

இன்று எதிர் கட்சியில் இருந்து கொண்டு பேசும் சஜீத் பிரமேதாச கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் இருந்த போது என்ன செய்தார் தமிழ் தேசிய கூட்டமைப்பும் அவர்களுடன் தானே இருந்தது என்ன பயன். அபிவிருத்தியும் இல்லை கல்முனை தமிழ் பிரதேச செயலகமும் இல்லை ஈழமும் இல்லை பச்சத் தண்ணியும் இல்லை வீர வசனம் மட்டும் தான் மிஞ்சி இருக்கினது. என அவர் மேலும் சாடி இருந்தார்.

2022ஆம் ஆண்டுக்கான பொருளாதார புத்தெழுச்சி பிரதேச வாழ்வாதார ஒருங்கிணைப்பு உப குழு கூட்டமானது திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரனின் ஏற்பாட்டில் இராஜாங்க அமைச்சர் விமல வீர திஸாநாயக்கா தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று மாலை இடம் பெற்று இருந்தமை குறிப்பிடத்தக்கது

இவ் கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் விமல வீர திஸாநாயக்கா பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன் உதவிப் பிரதேச செயலாளர் கே.சதிசேகரன் உதவி திட்டமிடல் பணிப்பாளர் எம்.அனோஜா இராஜாங்க அமைச்சரின் மாவட்ட இணைப்பாளர் சாந்தலிங்கம் மற்றும் அரசியல் பிரமுகர்கள் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டு இருந்தனர்.

# பயங்கரவாத தடைச் சட்ட நீக்கத்தை ஐரோப்பிய குழுவிடம்

அநுராதபுரத்தில் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவினால் அச்சுறுத்தப்பட்ட அரசியல் கைதிகளைசனிக்கிழமையா பார்வையிட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

இராஜாங்க அமைச்சரினால் துன்புறுத்தப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை சந்தித்து பேசியிருக்கின்றோம். அனைத்தையும் நாங்கள் நேரடியாக கேட்டறிந்துள்ளோம்.இது தொடர்பான விசாரணைகள் இடம்பெறுவதாகவும் அறிந்துள்ளோம். மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணை மேற்கொண்டுள்ளது.

தற்போது சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் நியமித்துள்ள விசாரணைக்குழுவும் விசாரணை செய்கின்றது. இதனைவிடவும் கூடுதலான விசாரணைகள் இடம்பெறும் என நாம் அறிகின்றோம். இந்த சம்பவங்கள் உண்மையாக இடம்பெற்ற நிகழ்வுகள் இதில் எவருக்கும் சந்தேகம் இருக்கவில்லை.

கடந்த பாராளுமன்ற தினத்தில் இவ்விடயம் எழுப்பப்பட்ட போது இந்த விடயத்திற்கு பொறுப்பாக உள்ள அமைச்சரவை அமைச்சரான நீதி அமைச்சர் அலி சப்ரி இந்த சம்பவங்களுக்காக மன்னிப்பு கேட்டார். இரண்டு தடவைகள் திரும்ப திரும்ப மன்னிப்பு கேட்டார். கைதிகளிடமும் அவர்களின் உறவினர்களுக்கு இதன் காரணமாக ஏற்பட்ட மன உளைச்சலுக்காகவும் மன்னிப்பு கேட்டார். ஆகவே நடக்காத விடயத்திற்கு அவர் மன்னிப்பு கேட்கவில்லை.

இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் கைதிகள் இந்த சிறைச்சாலைகளில் இருந்து தமிழ் பிரதேச சிறைச்சாலைகளுக்கு மாற்றப்பட வேண்டும். கொரோனா காலத்தில் யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு அவர்கள் மாற்றப்பட்டு இருந்தவர்கள். எனவே யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு மாற்ற முடியாது என எவரும் சொல்ல முடியாது.

வவுனியாவில் உள்ளது விளக்கமறியல் சிறையே. அது சிறிய இடம். எனவே முன்னர் நிர்வாகத்திற்கு தேவையானதாக யாழ்ப்பாணத்திற்கு மாற்றியிருந்தது போல் இவர்களது பாதுகாப்பு கருத்தியும் விசாரணைகள் சுயாதீனமாக இடம்பெறவேண்டுமாக இருந்தால் அவர்கள் அவ்வாறான சூழலுக்குள் மாற்றப்பட வேண்டும்.

அப்படியனால்தான் அவர்கள் விசாரணைகளுக்கு முகம் கொடுக்க கூடியதாக இருக்கும். பயம் இல்லாமல் சாட்சியம் வழங்க கூடியதாக இருக்கும். வெளியில் இருக்கும் சாதாரண மக்களே சாட்சியம் வழங்க அச்சப்படும் சூழலில் சிறைச்சாலைக்குள் அடைக்கப்பட்டுள்ளவர்கள் அது குறித்து பயப்படுவது நியாயம் என்பதனை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். எனவே அவர்கள் உடனடியாக இடமாற்றம் செய்யப்படவேண்டும் என அரசாங்கத்திடம் கோருகின்றோம்.

இவர்கள் நீண்ட காலமாக விசாரணைகள் பூர்த்தி செய்யப்படாமல் வழங்குகள் நிறைவு பெறாமல் வைக்கப்பட்டுள்ளவர்கள். ஆகவே இவர்களது காலம் நீடிக்கப்படாமல் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும். நாம் பல காலமாக கேட்டு வரும் விடயம் இது.

புயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றது. அதனை நீக்குவதாக வாக்குறுதி கொடுத்து நீக்காத காரணத்தால்தான் ஜிஎஸ்பி வரிச்சலுகை இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக்குழு இங்கு வருகின்றார்கள்.

தமிழ் தேசியக்கூட்டமைப்புடனும் செவ்வாய்க்கிழமை மாலை சந்திப்புக்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. பயங்கரவாத தடைச் சட்டம் முற்றுமுழுதாக நீக்கப்பட வேண்டும் என்பதனையே நாம் வலியுறுத்துவோம். அதன் கீழ் தடுத்து வைக்கப்பட்டவர்கள் அதன் கீழ் குற்றவாளிகளாக காணப்பட்டவர்கள் வழக்கு விசாரணை நடந்துகொண்டிருக்கின்றவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும் என்றார்.

## ஊரடங்குவேளையிலும்

# கல்முனையில் தமிழர்காணி அபகரிப்பா?

## இளைஞர்கள் போர்க்கொடி





**(காரைதீவு நிருபர்)**

ஊரடங்குவேளையையும் பொருட்படுத்தாது கல்முனைப்பிரதேசத்தில் தமிழர்காணியை அபகரிக்கும் செயற்பாடு தொடர்வதாக குற்றச்சுமத்தப்படுகிறது.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பெரிய நீலாவணையில் தமது காணி எனக் கூறி காணியினுள் நுழைந்த சிலர் காணியினை அளந்து எல்லையிட முனைந்தனர்.

சனிக்கிழமை இச்சம்பவம் இடம் பெற்றது.

அச்சமயம் இளைஞர் பொதுமக்கள் கிராம சேவையாளர் உட்பட தமிழ் இளைஞர் சேனை கல்முனைப் பிராந்திய உறுப்பினர்கள் விரைந்ததை அடுத்து அவ்விடத்தில் இருந்து காணி அளக்க வந்த குழுவினர் அவ்விடத்தைவிட்டு ஓடியுள்ளனர்.

இதனையடுத்து கல்முனை வடக்கு பிரதேசசெயலாளர் மற்றும் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து மக்கள் கலைந்து சென்றனர். மேலும் இது தொடர்பில் கருத்து தெரிவித்த இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் வாலிப முன்னணி துணைச் செயலாளர் அ.நிதான்சன் கூறுகையில்:

கொரனா பெரும் தொற்றுக் காரணமாக மக்கள் முடங்கிய நிலையிலும் அரச பொறிமுறை தடைப்பட்ட நிலையிலும் இவ்வாறு காணிகளை எவ்விதமான அறிவிப்பும் கிராம சேவகருக்கு செய்யப்படாமல் காணி அளக்க வந்தமை சந்தேகத்தை வலுப்படுத்தி உள்ளது எனவும் இது சட்ட விரோத ஆக்கிரமிப்பாக பல்வேறு சந்தர்ப்பங்களில் அரச காணிகள் தனியார்மயப்படுத்துவதை தடுக்க பொதுக்கட்டமைப்பு அவசியம் என்பதோடு கல்முனை வடக்கு பிரதேச செயலக எல்லையினுள் சட்டவிரோத காணி ஆக்கிரமிப்பில் ஈடுபடுவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்தார்.

## பட்டிருப்பு பாலத்திற்கு அருகிலிருந்து மோட்டார் குண்டு ஒன்று மீட்பு



**(ரக்ஸனா)**

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குபட்பட்ட பட்டிருப்பு பாலத்திற்கு அருகாமையில் இருந்து மோட்டார் குண்டு ஒன்று மீட்கப்பட்டதாக ஞாயிற்றுக்கிழமை களுவாஞ்சிகுடி பொலிசார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது

மட்டக்களப்பு வாவியின் பாட்டிருப்பு பாலம் அமைந்துள்ள பகுதில் மீன் பிடித்துக் கொண்டிந்த மீனவர்களின் வலையில் குண்டு ஒன்று சிக்கியுள்ளது. இவ்விடையம் குறித்து மீனவர்கள் உடனடியாக களுவாஞ்சிகுடி பொலிசாருக்கு அறிவித்துள்ளனர். உடன் இஸ்த்தலத்திற்கு விரைந்த களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உப்புல் குணவர்த்தன மற்றும் களுவாஞ்சிகுடி விசேட அதிரடிப்படையினர் உள்ளிட்ட குழுவினர் குண்டைப் பார்வையிட்டுள்ளனர்.

இந்நிலையில் நீதிமன்ற உத்தரவு பெற்ற பின்னர் விசேட அதிரடிப்படையின் குண்டு செயலிழக்கும் பிரிவினரால் இக்குண்டு செயலிழக்கச் செய்வதற்கு எடுத்துச்செல்லப்படவுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

## தாயகக் கலைஞன் வர்ண ராமேஸ்வரனின் மறைவுக்கு காரைதீவு பிரதேசசபை தவிசாளர் ஜெயசிறில் அனுதாப அஞ்சலி

**(காரைதீவு நிருபர் சகா)**

தொண்ணூறுகளில் யாழ்ப்பாணத்தில் கர்நாடக சங்கீதத்தில் தமக்கென ஒரு முத்திரையைப் பதித்திருந்த மூவர் பொன் சுந்தரலிங்கம் போல் திலகநாயகம் மற்றும் வர்ணகுலசிங்கம். வர்ண. ராமேஸ்வரனை அடையாளப் படுத்திக்காட்டியது தாயகப் பாடல்களே. அதிலும் குறிப்பாக உணர்ச்சி பெருக்கெடுத்துப் பாயும் பாடல்கள் அவை. அவரது மறைவு தமிழினத்திற்கு பேரிழப்பாகும் .

இவ்வாறு தாயகக் கலைஞன் வர்ண ராமேஸ்வரனின் மறைவுக்கு காரைதீவு பிரதேசசபைத் தவிசாளர் ஜெயசிறில் வெளியிட்ட அனுதாப அஞ்சலிக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.



அவரது அஞ்சலிக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்தமூவரில் பொன் சுந்தரலிங்கம் எண்ணிலடங்காத தாயகப் பாடல்களையும் பக்திப் பாடல்களையும் பாடியுள்ளார். அதிலும் அவர் பூபாளம் ராகத்தில் பாடும் பாடல்கள் வேறு ரகம்..

இந்த வகையில் வர்ண ராமேஸ்வரன் இன்னொரு ரகம்... அந்தக் காலகட்டத்தில் நல்லூர் திருவிழாக் காலங்களில் இவரது கச்சேரியை அனேகமாக நல்லை ஆதீனம் கம்பன் கழக கச்சேரிகளில் பெரும்பாலும் பார்க்கலாம். இருந்தாலும் வர்ண ராமேஸ்வரனை அடையாளப் படுத்திக் காட்டியது தாயகப் பாடல்களே...

கடல் கடந்து இசைக்கொரு பரிணாமமாக விளங்கிய வர்ண இராமேஸ்வரன் அவர்களின் இசையில் மயங்கிய கொறோனாவின் பிடியில் சிக்குண்டு காலமானார் என்ற செய்தி கேட்டு இசையுலகே வேதனையில் மூழ்கியிருக்கிறது.

யாழ்ப்பாணம்இ அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர் இராமேஸ்வரன். தந்தையார் கலாபூசணம் சங்கீதரத்தினம் முருகேசு வர்ணகுலசிங்கம் ஒரு சிறந்த இசைப் பாரம்பரியத்திலே தோன்றியவர். இவரது தந்தை வழிப்பேரனார், தாய் வழிப்பேரனாரும் இசை நாடகக் கலைஞர்கள். ஆரம்பக் கல்வியை அளவெட்டி சீனன்கோட்டை ஞானோதய வித்தியாசாலையிலும், பின்னர் உயர் கல்வியை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிலும் கற்றார்.

இராமேசுவரன் பண்ணிசை மூலமும், பின்னர் மிருதங்கம் வாசிப்பது மற்றும் ஆர்மோனியம் வாசிப்பதன் மூலமும் தந்தையின் பயிற்சியில் கருநாடக இசையைக் கற்றார். யாழ் பல்கலைக்கழகத்தின் இராமநாதன் நுண்கலைப் பிரிவில் மாணவனாக இணைந்து கொண்டார். அதன் வாயிலாக நான்கு ஆண்டுகள் 'இசைக்கலைமணி' என்னும் பல்கலைக்கழகப் பட்டத்தைப் பெற்று, அங்கேயே தொடர்ந்து ஐந்து ஆண்டுகளாக இசை விரிவுரையாளராகவும் பணியாற்றினார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துடி துடித்துப் போயிருக்கும் குடும்பத்தினருக்கும் மற்றும் உறவுகளுக்கும் என் போன்ற இசையால் இணைந்த இசைக் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த இரங்கல்களையும் தெரிவிக்கின்றோம்.




## நீர் சுத்திகரிப்பு இயந்திரம் அன்பளிப்பு

**எம்.ஐ.எம்.றியாஸ்**

ரீ.ஓ.ஐ. நிறுவனத்தினால் நோயாளிகள் மற்றும் ஊழியர்கள் பயன்பெறும் வகையில் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் சத்திர சிகிச்சைப் பிரிவு விடுதிக்கு நீர் சுத்திகரிப்பு இயந்திரம் வைத்தியசாலையில் வழங்கி வைக்கப்பட்டது.

ரீ.ஓ.ஐ. நிறுவனம் சார்பில் டொக்டர் றிபாஸ்தீன் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் அஸாத் எம் ஹனிபாவிடம் உத்தியோகபூர்வ கையளிக்கப்பட்டமை குறிப்பிட்டத்தக்கது.

இந்நிகழ்வில் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் ஊழியர்கள் கலந்து கொண்டனர்.




## இரண்டு தடுப்பூசிகளையும் வழங்கிய நாடுகளின் பட்டியலில் இலங்கை 5 ஆவது இடம்

### சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

**க.கிஷாந்தன்**

2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டமானது கிராமப்பகுதிகளையும் மேம்படுத்துவதாகவே அமையும். எனவே, அரசாங்கத்தின் பயணம் வெற்றியளிக்க உங்கள் ஆதரவை தாருங்கள் என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

கொத்மலை பகுதியில் நேற்று நடைபெற்ற அரசியல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இந்நிகழ்வில் அமைச்சர் சீ.பீ.ரத்நாயக்க மற்றும் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

அவர் மேலும் கூறியவை வருமாறு,

'நாம் எதிரணியில் இருக்கும் போது, மக்களே எமக்கு நம்பிக்கையளித்தனர். எம்முடன் பயணித்தனர். அதனால்தான் குறுகிய காலத்துக்குள் கட்சியை உருவாக்கி ஆட்சியைப்பிடித்தோம்.

மக்களின் எதிர்ப்பார்ப்புகளை நிறைவேற்றுவதில் தீவிரம் காட்டி வருகின்றோம். இவ்வாறானதொரு நிலைமையில்தான் கொரோனா நெருக்கடி ஏற்பட்டது. இதனால் பொருளாதார நெருக்கடியும் ஏற்பட்டது. இருந்தாலும் மக்களின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்தி அவர்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.



உலகில் மொத்த சனத்தொகையில் 50 வீதமானோருக்கு இரண்டு தடுப்பூசிகளையும் வழங்கி நாடுகளின் பட்டியலில் இலங்கை 5ஆவது இடத்துக்கு வந்துள்ளது. நிதி நெருக்கடி இருந்தால்கூட சுகாதார அமைச்சால் அமைச்சரவையில் முன்வைக்கப்படும் பத்திரங்கள் நிராகரிக்கப்படுவதில்லை. மக்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படுவதால்தான் இவ்வாறு நடைபெறுகின்றது.

நாட்டை மூடுமாறு சிலர் கோஷம் எழுப்பினர். அவர்களுக்கு மாதம் அரசாங்க சம்பளம் வழங்கப்படுகின்றது. ஆனால் நாட்கூலி பெறுபவர்களின் நிலைமை?

நாடு தற்போது வழமைக்கு திரும்பிக்கொண்டிருக்கின்றது. தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடைகின்றது. வைத்தியசாலைகளில் இடம் உள்ளது. 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் கிராமிய பகுதிகளையும் மேம்படுத்துவதாகவே அமையும். ' என்றார்.

## பயிற்சி வகுப்பு!

**(மாளிகைக்காடு நிருபர்)**

இந்தியாவின் ஈ.ஜி.எஸ் பிள்ளை பொறியியல் கல்லூரியில் ISTE (Indian Society for Technical Education, New Delhi) ஆதரவுடன் இந்தியாவில் துறை சார்பாக ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்கான ஒரு வாரகால பயிற்சி வகுப்புகள் நடைபெற்றன. இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகமும் இந்தியாவில் ஈ.ஜி.எஸ் பிள்ளை கல்விக் குழுமமும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டதன் அடிப்படையில் 2 பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் 16 இயந்திரவியல் மாணவர்கள் ஒன்லைன் (online) மூலம் ஒரு வார காலம் நடைபெற்ற பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டனர்.

தென்கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் எம்.எம்.எம்.நாஜீம், ஒருவாரகால வகுப்பினை துவக்கி வைத்தார். பயிற்சியில் இயந்திரவியல் துறை சார்பான புதிய கண்டுபிடிப்புக்கள் அதீ நவீன தொழில்நுட்பத்தின் பயன்பாடு மற்றும் அதன் அவசியம் மற்றும் ஆராச்சி முடிவுகளை இந்தியா, மலேசியா, இலங்கை போன்ற நாடுகளில் உள்ள பேராசிரியர்கள் கலந்துகொண்டு விளக்கமளித்தனர்.

தென்கிழக்குப் பல்கலைக்கழக இயற்பியல் துறை தலைவர் கலாநிதி யூ.பாரூக் அவர்களும் கலந்துகொண்டு செராமிக் தொழில்நுட்பம் பற்றி விரிவாக விளக்கமளித்தார். இந்த ஒருவாரகால பயிற்சி வகுப்பினை, தொழில் மற்றும் வெளிநாட்டுத்துறை இயக்குனர் கலாநிதி சிவராமன், கலாநிதி ராமானுஜம் ஆகியோர் ஒருங்கிணைந்து நடத்தினர். ஈ.ஜி.எஸ் பிள்ளை கல்விக் குழுமத்தின் செயலாளர் கலாநிதி எஸ்.பரமேஸ்வரன், முதல்வர் கலாநிதி ராமபாலன், பேராசிரியர் சின்னத்துரை மற்றும் பேராசிரியர் கிருஸ்னமோகன் ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சி வகுப்பு சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு வழங்கினர்.


SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப் பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக நகைத் தொழிலில் அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல் பெயர் பெண்டன், மற்றும் அனைத்து நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன் செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch


Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
Tel : 044 2410241
Fax : 044 2410245
sikaramgmbh@gmail.com / www.sikaram.com


Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57


Allegrotto Pizza Kurier
Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch
Seela Food Gastro AG
044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch
Züricherstrasse 15
8400 Winterthur.


SwissLife Select
சுவிசில் சொந்த வீடு வாங்க விரும்பும் உறவுகளே, அவதானமாகச் செயற்படுங்கள். உங்கள் கடனுக்கான வட்டி வீதம் எப்போதும் அதிகரிக்க கூடும். எனவே, சரியான வங்கியையும், வட்டி வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும் ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt


5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில் நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்
ECDL
Office
Windows 10
தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59

# தேர்தல் காலத்தில் அரிசி மூட்டைகளுடன் வந்த அரசியல்வாதிகளையும் காணவில்லை- மக்கள் அங்கலாய்ப்பு



(நூருல் ஹுதா உமர்)

உணவுப் பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்ய முடியாமல் கிராமப்புற மக்கள் திண்டாடுவதாக கவலை தெரிவித்துள்ளனர். இருந்தபோதும் மதுபான சாலைகளை திறந்து வைத்ததன் மூலம் இல்லாத இயலாத வறிய குடும்பங்களுக்கு மத்தியில் குடும்ப பிணக்குகளை போதையில் அதிகரிக்க செய்துள்ளதாக மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இதே நேரம் அத்தியாவசிய பொருட்களான சீனி பால் மா போன்றவற்றை கொள்வனவு செய்வதற்காக செல்லும் மக்களை பி சி ஆர் மற்றும் அன்டிஜன் பரிசோதனை என்ற மாயையில் துரத்தி அடித்து ஓட்டம் காட்டும் அதிகாரிகள் சாராயத்தை கொள்வனவு செய்வதற்காக மதுபான சாலைகளை நாடிச் செல்லும் மக்களுக்கு பாதுகாப்பு அளித்து வருகின்ற மோசமான நிலைமையை காணக் கூடியதாக உள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

இவர்கள் பசி பட்டினி அத்தியாவசிய பொருட்களின் விலைவாசி அதிகரிப்பு வாழ்க்கைச் செலவு உயர்வு போன்றவற்றினால் சொல்லொண்ணா கஷ்டங்களை மக்கள் அனுபவித்து வருகின்றனர்

இந்த நிலையில் அரசாங்கத்தினால் ஏழை எளிய மக்களுக்கு வழங்குவதற்காக குறிப்பிடப்பட்ட 2000 ரூபா வாழ்வாதாரத்திற்கான உதவித்தொகை கொடுப்பனவு கூட அம்பாறை மாவட்டத்தின் சில பிரதேச செயலாளர் பிரிவுகளில் உரிய மக்களுக்கு வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த 2000 ரூபா கொடுப்பனவை பெறுவதற்கு தகுதியான மக்கள் பலர் இருந்தும் அவர்கள் புறக்கணிக்கப்பட்ட நிலையில் அதிகாரிகளின் அலட்சியப்போக்கு காரணமாக பல குடும்பங்கள் இக் கொடுப்பனவு கிடைக்கப் பெறாமல் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். தேர்தல் காலத்தில் அரிசி மூட்டைகளுடனும் ஆயிரம் ரூபாய் 2000 ரூபாய் பணத்துடனும் தமது குடிசைகளை நோக்கி ஏறி இறங்கிய அரசியல்வாதிகளை கூட இந்த கஷ்டமான காலத்தில் காண முடியவில்லை என இப்பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்

# வாழைச்சேனை ஆதார வைத்தியசாலை கொரோனா பிரிவுக்கு உபகரணங்கள் வழங்கி வைப்பு

(எச்.எம்.எம்.பர்ஸான்)



வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் இயங்கி வரும் கொரோனா சிகிச்சை பிரிவுக்கு சுமார் 215,000 ரூபாய் பெறுமதியான ஒட்சிசன் இயந்திரம், முகக் கவசம் போன்ற வைத்திய உபகரணங்கள் வெள்ளிக்கிழமை வழங்கி வைக்கப்பட்டுள்ளன.


வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலையின் 2001 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண வகுப்பு பழைய மாணவர் சங்கத்தினர் இவ் உபகரணங்களை வழங்கி வைத்தனர்.

குறித்த உபகரணங்களை பாடசாலையின் அதிபர் ஏ.எம்.எம். தாஹிருடன் இணைந்து பழைய மாணவர் சங்கத்தினர் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் என். மயூரன், வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி பீ.சதீஷ்குமார் ஆகியோர்களிடம் வழங்கி வைத்தனர்.

இவ் உபகரணங்களை வழங்கி வைத்த பழைய மாணவர் சங்கத்தினருக்கு வைத்தியசாலை நிர்வாகம் தமது நன்றிகளை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# திருமலை மாவட்டத்தின் முன்னேற்றம் ஏனைய மாவட்டங்களின் முன்னேற்றத்தை விட மிகச் சிறப்பானது

## இராஜாங்க அமைச்சர் அநுராத ஜயரத்ன



இஃஜாஸ் ஏ பரீட்

கொவிட் வைரசிற்கு மத்தியில் நீர்ப்பாசன செழுமை தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்தின் முன்னேற்றம் ஏனைய மாவட்டங்களின் முன்னேற்றத்தை விட மிகச் சிறப்பான முறையில் அமைந்துள்ளதாகவும் அதற்காக அர்ப்பணித்து சேவையாற்றிய அனைத்து அதிகாரிகளுக்கும் தமது நன்றிகளை தெரிவித்துக்கொள்வதாக நேற்று திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற நீர்ப்பாசன அபிவிருத்தி தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தின்போது கிராமிய வயல் நிலங்கள் மற்றும் அண்டியுள்ள குளங்கள் நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் அநுராத ஜயரத்ன தெரிவித்தார்.

தேசிய உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் நீர்ப்பாசனத் செழுமை அபிவிருத்தி திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. கிராமிய குள நிர்மாண வேலைகளின் போது கிராமத்தில் இருக்கக் கூடிய வசதி வாய்ப்புகள் இயந்திர சாதனங்கள் தொழிலாளர்களை பெற்றுக் கொள்வதன் மூலமாக அக்கிராம மக்கள் பொருளாதார ரீதியாக பல பலன்களை பெறக் கூடியதாக இருக்கும். எனவே குறித்த திட்டங்களை வகுக்கும் போது அக்கிராம மக்கள் மூலம் பெற்றுக் கொள்ளக்கூடிய வசதி வாய்ப்புக்கள், சேவைகளை உள்ளடக்கிய அடிப்படையில் உரிய அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்படுவது சாலச் சிறந்தது என்று அமைச்சர் இதன் போது தெரிவித்தார்.

மேலும் திருகோணமலை மாவட்டத்தில் இதுவரை காலமும் குளங்களின் எல்லைப்புற பிரதேசங்கள் அடையாளப்படுத்தப்படாமல் இருப்பதாகவும் பிரதேசங்களை அடையாளப் படுத்தும் நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளது. குறிப்பாக %0 பட்டதாரிகள் அமைச்சுக்கு இணைக்கப்பட உள்ளார்கள். நிலஅளவைத் திணைக்களத்தின் மூலம் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட உள்ளது. இதன் மூலம் குளங்களை அண்டியுள்ள பிரதேசங்களில் உள்ள காணி அபகரிப்பு செய்வதனை தடுக்க கூடியதாக இருக்கும். அத்துடன் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற குள புனர்நிர்மாண வேலைகளின் போது கிராம மக்களுக்கு மிகவும் பிரயோசனம் ஏற்படக்கூடிய வகையில் அந்த அபிவிருத்தி திட்டங்களை வினைத்திறனான முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். கடந்த ஆட்சியில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு குள அபிவிருத்தி திட்டங்கள் பிரச்சினைகள் கொண்டதாகவும் தரமற்றதாக காணப்படுவதாக மக்களால் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு உள்ளது. எனவே அவ்வாறான குற்றச்சாட்டுக்கள் ஏற்படா வண்ணம் புனர்நிர்மாண வேலைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு இதன் போது அமைச்சர் அறிவுரை வழங்கினார்.

நீர்ப்பாசன செழுமை வேலைத்திட்டத்தின் கீழ் எஞ்சி உள்ள குளங்களை புனர்நிர்மாணம் செய்வதற்கான நிதி விரைவில் ஒதுக்கீடு செய்யப்படும். தற்பொழுது வைரஸ் காரணமாக நாட்டின் பொருளாதாரம் பல பாதிப்புக்களை எதிர்நோக்கி இருந்தாலும் நாட்டினுடைய பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கான முயற்சிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இதன்போது அமைச்சர் தெரிவித்தார்.

மாவட்டத்தினுடைய நீர்ப்பாசன அபிவிருத்திக்கு தேவையான உதவிகளை அரசாங்கம் வழங்கி வருகின்றது. குறிப்பாக இராஜாங்க அமைச்சர் எமது மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்டு மாவட்டத்தினுடைய நீர்ப்பாசன அபிவிருத்தி தொடர்பான விடயங்களை மேற்பார்வை செய்து எதிர்வரும் காலங்களில் மாவட்டத்தினுடைய நீர்ப் பாசன அபிவிருத்திக்கு தேவையான உதவிகளை வழங்குவதாக தெரிவித்துள்ளார்.

# சம்மாந்துறைக் கல்வி வலயத்தின் சித்தி வீதம் அதிகரிப்பு



(எஸ்.சபேசன்)

வெளியான க.பொ.த. சாதாரணதரப் பெறுபேறுகளின்படி சம்மாந்துறைக் கல்வி வலயத்தில் 56 வீதமான மாணவர்கள் சித்தியடைந்து உயர்தரம் கற்பதற்கான தகுதி பெற்று இருப்பதாக வலயக்கல்விப் பணிப்பாளர் எம்;எஸ்.எஸ்.நஜீம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் பரீட்சைக்குத் தோற்றிய 1404 மாணவர்களில் தமிழ், கணிதம் உட்பட 783 மாணவர்கள் சித்திபெற்று உயர்தரம் கற்பதற்கான தகுதியினை பெற்றுள்ளதுடன் வலயத்தில் 9ஏ. சித்தியினை 24 மாணவர்களும், 8ஏ சித்தியினை 34 மாணவர்களும் பெற்று இருப்பதுடன் 151 மாணவர்களது அழகியல் பாடத்தின் பெறுபேறு வெளியிடப்பட இருப்பதுடன் இவர்களது பெறுபேறு வெளியாகும் பட்சத்தில் வலயத்தின் சித்தி வீதம் மேலும் 4 வீதத்தால் அதிகரிக்கக் கூடும் எனவும் வலயக் கல்விப்பணிப்பாளர் தெரிவித்தார்.

அதேவேளை இவ்வருடப் பெறுபேறானது கடந்த வருடத்தினைக் காட்டிலும் அதிகரித்து இருப்பதுடன் இவ் அடைவுகளை அதிகரிக்க முயற்சிகளை மேற்கொண்ட பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் கற்பித்த ஆசிரியர்கள் பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள்,உதவிக்கல்விப்பணிப்பாளர்கள்,கோட்டக்கல்விக் கல்விப்பணிப்பாளர்கள் அனைவருக்கும் பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளார்.

# வறுமை நிலையிலும் பரீட்சையில் இரட்டையர் சாதனை



(இ.சுதா)

அண்மையில் வெளியான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் பட்டிருப்பு கல்வி வலயத்திலுள்ள போரதீவுப்பற்று கோட்டக்கல்வி அலுவலகத்திற்குட்பட்ட மண்டூர் சக்தி மகா வித்தியாலயத்திலிருந்து இம்முறை க.பொ.த. சாதாரண தரப்பரீட்சைக்கு தோற்றிய இரட்டை சகோதரிகளான கீர்த்தனா (8AS) கீர்த்திகா(7AB S) பெறுபேற்றினை பெற்று பிரதேசத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர்.

பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய நிலையில் எதுவித வருமானங்களும் இல்லாத நிலையில் பெற்றோரின் கூலி வேலையில் கிடைக்கும் மிகக் குறைந்தளவான வருமானம் மூலமாக குடிசை வீட்டில் வாழ்ந்து எதுவிதமான பிரத்தியேக வகுப்புக்களுக்கு செல்லாது சுயமாக பாடசாலையில் கற்றுக்கொண்ட விடயங்களை சகோதரிகள் தமக்குள் கலந்துரையாடி பரீட்சைக்கு தோற்றி சிறந்த பெறுபேற்றினை பெற்றுள்ளனர்.

# பொது மக்களின் பாவனைகளில் இருந்து வரும் குளத்து நீரை வெளியேற்ற வேண்டாம்: கிராம மக்கள் கோரிக்கை



வாஸ் கூஞ்ஞ

நன்னீர் மீன்பிடிக்காக பொது மக்களின் நாளாந்த பயன்பாட்டில் இருக்கும் குளத்து நீரை வெளியேற்ற வேண்டாம் என பொது மக்கள் குரல் எழுப்புகின்றனர்

இது தொடர்பாக தெரிய வருவதாவது

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட அடம்பன் தாமரைக் குளத்து நீர் மீன் பிடிப்பதற்காக வெளியேற்றப்பட்டு கொண்டிருக்கிறது

அடம்பன் தாமரைக்குளம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் மீன் பிடிப்பதற்காக பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ள குளத்து நீரை வெளியேற்றி வருகிறார்கள்

குளத்தைச் சுற்றி குடியிருக்கும் மக்களின் அனுமதி பெற்ற பின்பே நீரை வெளியேற்ற வேண்டும் என்று மாந்தை மேற்கு பிரதேச செயலகம் கூறியிருக்கிறது

மீன்பிடிப் பதற்காக மக்கள் பயன்பாட்டில் உள்ள இந்த குளத்து நீரை வீண்விரயம் செய்வதற்கு அப்பகுதி மக்கள் எவரும் விரும்பவில்லை

இந்த குளத்து நீர் பொதுமக்கள் குளிப்பதற்கும் கால்நடைகள் குடிநீராகவும் மேட்டு நில பயிர்ச்செய்கைக்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது

மேலும் இந்த குளத்து நீர் வற்றிப் போனால் அருகில் உள்ள குடிநீர் கிணறுகள் வற்றிப் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு குடிநீர் தட்டுப்பாடு நிலவும்

மீன் பிடிக்க வேண்டுமானால் குளத்தில் வலைகளை போட்டு மீன் பிடிக்கலாம் நீரின் பெறுமதி அறியாமல் இவ்வாறான செயற்பாடுகளை அர அதிகாரிகள் கண்டித்து குளத்து நீர் வெளியேற்றப்படுவது உடனடியாக தடுத்து நிறுத்தி பொதுமக்கள் பயன் பெற வழி செய்ய வேண்டும் என்று அப்பகுதி பொதுமக்கள் கேட்டுக் கொண்டார்கள்

# க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் ஒன்பது பாடங்களிலும் 9 A சித்தி



(ஹஸ்பர் ஏ ஹலீம்)

திருகோணமலை மாவட்டம் கிண்ணியா கல்வி வலயத்துக்குட்பட்ட முள்ளிப்பொத்தானை பாத்திமா பாலிகா மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவி எச்.ஹாரிதா இரு நாட்களுக்கு முன்னர் வெளியான க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் ஒன்பது பாடங்களிலும் 9 A சித்திகளைப் பெற்று தனது பாடசாலை சமூகத்திற்கும் முள்ளிப்பொத்தானை பிரதேசத்திற்கும் தனது குடும்பத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

முள்ளிப்பொத்தானையைச் சேர்ந்த மௌலவி முகைதீன் வாபா ஹபீபுள்ளாஹ் மற்றும் சித்தி ஹனீஸா ஆகியோரின் புதல்வியான எச்.ஹாரிதா தரம் 01 தொடக்கம் தரம் 11 வரை முள்ளிப்பொத்தானை தி/கிண்/பாத்திமா பாலிகா மகா வித்தியாலயத்தில் கல்வி கற்ற மாணவியாவார். தரம் - 05 புலமைப் பரீட்சையிலும் வெட்டுப் புள்ளிக்கு மேல் புள்ளிகள் பெற்று சித்தியடைந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

தனது பாடசாலைக் காலத்தில் தொடர்ந்தேர்ச்சியாக பாடசாலைக்கு சமூகம் தரும் மாணவியாகவும், தொடர்ந்தும் தனது வகுப்பில் முதல் நிலை மாணவியாகவே திகழ்ந்துள்ளார்.

எதிர்கால இலக்காக மகப்பேற்று வைத்திய நிபுணராக தனது இலக்கினை அடையவுள்ளதாகவும் தெரிவித்தார்.

குடும்பத்தில் ஆறு பிள்ளைகளில் ஐந்தாவது பிள்ளையும் ஒரே ஒரு பெண் பிள்ளையும் ஆவார்.

# கூட்டெரு தயாரிப்பதற்குரிய இயந்திர விளக்கமும் பயிற்சியும் விவசாயிகளுக்கு வழங்கி வைப்பு

( ரக்ஸனா)



கிழக்கு மாகாண ஆளுநரின் நிதி ஒதுக்கீட்டில் விவசாய அமைச்சின் செயலாளரின் பணிப்பின்பேரில், கூட்டெரு தயாரிப்பதற்காக மூலப் பொருட்களை இலகுவாக வெட்டுவதற்காக கமநல கேந்திர நிலையங்களுக்கு வழங்கப்பட்ட இயந்திரம் இயக்கும் செயற்பாடும் அது தொடர்பான விளக்கப் பயிற்சியும் சனிக்கிழமை பழுகாமம் விவசாய விரிவாக்கல் பிரிவிலுள்ள களுமுந்தன்வெளி எனும் கிராமத்திர் இடம்பெற்றது.

இதன்போது மூலப் பொருட்களை சிறு துண்டுகளாக வெட்டும் மேற்படி இயந்திரம் இயக்கப்பட்டு அது தொடர்பில் விவசாய விவசாயிகளுக்கு அதிகாரிகளால் விளக்கமளிக்கப்பட்டது.

பழுகாமம் பிரிவின் விவசாய போதனாசிரியர் ப.சகாப்தனின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாயப்பணிப்பாளர் வீ.பேரின்பராஜா, தெற்கு வலய உதவி விவசாயப் பணிப்பாளர் ரி.மேகராசா, விவசாய போதனாசிரியர்கள், தொழிநுட்ப உத்தியோகத்தர் விவசாயிகள் உள்ளிட்ட பலர் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.

# இலங்கை வாழ் மாணவர்களுக்கு அரிய சந்தர்ப்பம்

## அவுஸ்திரேலியாவில் கல்வித் தகைமையுடன் கூடிய பகுதி நேர வேலைவாய்ப்பு!!



UNSW Global

**Are you after O/Levels?**

Start your Journey to a World TOP 50 University in Australia from Sri Lanka

Apply now
**UNSW FOUNDATION STUDIES**

Contact us to start your journey
Lavanya:
077 489 8773
lavanya.k@aibt.education

AIBT CAMPUS

சாதாரண தரத்தில் (O/L ) சித்தி அடைந்த 24 வயதுக்கு உட்பட்டவர்கள் மற்றும் 25 - 35 வயதிற்கு உட்பட்ட (Mature Students) பொருத்தமான ஆரம்பக் கட்ட கல்வித்தகமை உடையவர்களுக்கு, இதோ உலகின் 44 ஆவது இடத்தில் உயரிய கல்வித்தரத்தில் திகழும் அவுஸ்திரேலிய பல்கலைக்கழகமான The University of New South Wales Global, Sydney, Australia (https://www.unswglobal.unsw.edu.au/) தனது Foundation studies கற்கையை எம் மாணவர்களுக்கு வழங்குவதன் மூலம் அவுஸ்திரேலியா நாட்டில் பொருத்தமான பகுதிநேர வேலை வாய்ப்புடன் மேற்படிப்பையும் தொடரக் கூடிய அருமையான வாய்ப்பையும் வழங்குகிறது . இப்பாட நெறியினை கொழும்பு மற்றும் கண்டியில் அமைந்துள்ள AIBT(Asian Institute of Business and Technologyd https://aibt.education/ ) கல்விக் கூடத்தில் மாத்திரமே கற்பிக்க அவுஸ்திரேலிய பல்கலைக்கழகமானது கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு அனுமதி கொடுத்துள்ளது.

**அக்டோபர் 5ஆம் திகதி**
பாடகக் கற்கை ஆரம்பிக்கப்படவுள்ளது

# "GRAB YOUR OPPORTUNITY"

**Are you exploring opportunities for world class education with an Australian University?**

The UNSW Global (https://www.unswglobal.unsw.edu.au/) offers an exciting opportunity for you through AIBT Campus (Asian Institute of Business and Technology- https://aibt.education/ ) in Colombo and Kandy providing students a dedicated pathway to achieve their university dreams in Australia to study at University of New South Wales ,Sydney, a top rank work class university .

AIBT will deliver the UNSW Global Foundation Studies Program to students at its campuses in Colombo and Kandy.

For more information, please Call Ms. Lavanya on 077 4898 773 for the course commencing Oct 5th ,2021

## சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்!!! விண்ணப்பிக்க முந்துங்கள்!!

மேலதிக விபரங்களை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் பெற்றுக் கொள்ள அழைக்கவும் Ms.Lavanya - 077 4898 773

@copyright supeedsam @copyright supeedsam @copyright supeedsam

# மட்டக்களப்பில் கோரோனா காலங்களில் மக்கள் பேராதரவு பெற்ற

# சவாரியின் உணவு விநியோக சேவைகள்

மக்களின் வாழ்க்கையினை மிக இலகுவானதாக மாற்றியமைக்கும் தொழில்நுட்பத்தின் அசுர வளர்ச்சியானது பல்வேறு துறைகளிலும் தனது ஆதிக்கத்தினைச் செலுத்தி வருகின்றது. அதனடிப்படையில் அபிவிருத்தியடைந்து வருகின்ற ஏனைய மாவட்டங்களைப் போன்று மட்டக்களப்பு மாவட்டத்தினையும் அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்லும் வகையில் சவாரி செயலியானது 2020ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ம் திகதி உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

Savari Food செயலி மூலமாக மட்டக்களப்பு நகரத்தில் வாழும் மக்களுக்கும் மட்டக்களப்பு நகரத்திலிருந்து 15டுட் சுற்றுவட்டாரத்திற்குட்பட்ட பிரதேசங்களில் வாழும் மக்களுக்குப் பிடித்த உணவகம் மற்றும் கடைகளில் இருந்து சமைத்த மற்றும் சமைக்காத உணவுகளை இருக்குமிடத்திலிருந்தே இலகுவாகத் தெரிவுசெய்துகொள்ளும் சந்தர்ப்பத்தினை சவாரி செயலியானது ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. அத்துடன் நட்சத்திர உணவகங்கள் முதல் சிறிய உணவகங்கள் மற்றும் வீடுகளில் தயாரிக்கப்படும் உணவுகள் வரை கிட்டத்தட்ட 80 இற்கும் மேலதிகமான உணவு விநியோகஸ்தர்கள் இதில் இணைக்கப்பட்டுள்ளனர். விரைவாகவும், மிகக் குறைந்த கட்டணத்திலும், Delivery மூலமாகவும், முற்றிலும் இலவசமாக காத்திருப்புக்களின்றி SelfPickup மூலமாகவும் உணவுகளைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பினை உருவாக்கியுள்ளார்கள். இவ் COVID19 காலப்பகுதிகளில் மக்கள் சனநெரிசலாக உணவகங்களில் காத்திருக்காது உணவுகளை இலகுவாகப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகளையும் Savari Food உருவாக்கியுள்ளது..

சவாரி தனது சேவைகளை மக்கள் இலகுவாக பெற்றுப் பயனடையக் கூடிய வசதியினை வழங்கியுள்ளதுடன்; இத்தகைய சேவைகளின் மூலமாக மட்டக்களப்பு மக்களின் வாழ்க்கையை இலகுபடுத்தி விரைவாகவும், பாதுகாப்பாகவும் உணவுத் தெரிவுகளை மேற்கொண்டு உணவுகளைப் பெற்றுக்கொள்வதற்கான வசதிகளையும் தொழில்நுட்ப ரீதியில் உருவாக்கியுள்ளது. அது மட்டுமல்லாது பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் சுயதொழில் வாய்ப்புக்களை ஊக்குவித்து வளர்ச்சிபெறச் செய்யவும், இளைஞர் யுவதிகளுக்கு முழு நேர மற்றும் பகுதி நேர தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கவும், வீடுகளில் உணவு உற்பத்திகளை தயாரித்து விநியோகிப்போர், உணவக உரிமையாளர்கள் போன்றவர்களின் உணவு உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்குமான சிறந்த தளமாக சவாரியின் சேவைகள் காணப்படுகின்றன. இதனூடாக மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தினையும் Savari Food வழங்கியுள்ளது. இதன்மூலம் இவ் நிறுவனத்தினால் முழு நேர மற்றும் பகுதி நேரமாக 50 இற்கும் அதிகமான இளைஞர் யுவதிகளுக்கான வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படுள்ளன.



தற்போது நாட்டிலுள்ள நிலவுகின்ற Covid 19 சூழ்நிலையிலும் பயணத்தடை மற்றும் ஊரடங்கு காலங்களிலும் மக்களின் அன்றாடத் உணவுத் தேவைகளையும், பாதுகாப்பினையும் கருத்திற்கொண்டு; தங்குதடையின்றி சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி மக்களுக்கு சிறப்பான சேவையினை சவாரி புரிந்து வருகின்றது. மட்டு நகரில் பொது முடக்கத்தின் போது சுயதனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்ட மற்றும் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ள குடும்பங்கள் மற்றும் தனிநபர்களுக்கு அவர்களின் நன்மை கருதி சவாரி தனது உணவு விநியோக சேவையை சுகாதார முறைகளை பின்பற்றி நேரடியாக தொடர்பற்ற முறையில் வழங்கி வருகின்றது. தொழில்நுட்ப ரீதியில் பணப்பரிமாற்றமும், பாதுகாப்பான உணவு விநியோகமும் மக்களுக்கு ஏற்ற விதத்தில் அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மிக விரைவில் சவாரியின் சேவைகள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் முழுவதும் விஸ்தரிக்கப்பட்டு அதனது சேவையினைத் தொடரும் என Maxmetrics Ventures (Pvt) Ltd இயக்குனரும், சவாரி தலைமை நிர்வாக அதிகாரியுமான திரு. தேவதாசன் மயூரன் அவர்கள் தெரிவித்துள்ளார்.







FOR YOUR SMART FOOD
Savari.lk

@copyright supeedsam @copyright supeedsam @copyright supeedsam

# நினைவேந்தல்களை வட,கிழக்கு தமிழர் பிரதேசங்களில் தடை செய்வது மனித உரிமை மீறல் செயற்பாடாகும்

## பிரசன்னா இந்திரகுமார் ஆதங்கம்

**(இ.சுதா)**

வடகிழக்கு பிரதேசங்களில் தமிழ் மக்கள் உணர்வு பூர்வமாக முன்னெடுக்கின்ற நினைவேந்தல்களை தடை செய்வதில் அரசாங்கம் பொலிஸாரை முன்னிலைப்படுத்துவது அடிப்படை மனித உரிமை மீறல் செயற்பாடாகும்.

தியாகி திலீபனின் நினைவு தினத்தினை வடகிழக்கு தமிழர் தாயக பிரதேசங்களுக்கு நினைவு கூர்வதற்கு பொலிஸார் தடை உத்தரவு வழங்கியுள்ளனர்.இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே கிழக்கு மாகாண சபையின் முன்னாள் பிரதித் தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கும் போது கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் நினை வேந்தல்களுக்கு தடை விதிக்கப்பட வில்லை ஆனால் தற்போதைய அரசாங்கமானது திட்டமிட்ட வகையில் தமிழர்களின் உணர்வுகளை அடக்கி ஆழ்கின்றமை ஜனநாயகத்திற்கு விடுக்கின்ற



சவாலாகும்.இலங்கை ஜனநாயக நாடு என மார்வினைத் தட்டிக்கொள்கின்ற அரசாங்கம் தமிழர்களின் உணர்வினை அடக்கி ஒடுக்குவது வேடிக்கையானது.

கொரோனா வைரஸ் தாக்கத்தினை காரணம் காட்டி நினைவேந்தல் நிகழ்வினை தடை செய்யும் அரசாங்கம் அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களின் நிகழ்வுகளின் போது பொது மக்களையும் பொது அமைப்புக்களையும் அழைத்து அரசியல் களம் அமைக்கின்ற போது கொரோனா தாக்கம் ஏற்படாதா என்ற வினா எழுகின்றன.இதற்கான பதிலை அரசாங்கத்தினால் வழங்க முடியாது.

தென்னிலங்கையில் அரச நிகழ்வுகளை நடாத்துவதற்கு முழுமையான ஒத்துழைப்பினை வழங்கும் பொலிஸார் வடகிழக்கு பிரதேசங்களில் உணர்வு பூர்வமான நிகழ்வினை தடைசெய்வது ஜனநாயகமா? இல்லை இது தமிழர் உணர்வுகளை நசுக்கும் செயற்பாடாகும்.

வடகிழக்கில் நீதிக்காக குறல் கொடுத்த ரெலோ கட்சியின் மூத்த தலைவர் குட்டிமணி உட்பட அவர்களின்சக போராளிகளும் வெளிக்கடை சிறைச்சாலையில் 1983 ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்டிருந்தார். அவர்களின் 38ஆவது நினைவு தினத்தினை அஞ்சலி செலுத்துவதற்கு வடகிழக்கில் அரசாங்கம் பொலிஸாரின் உதவியோடு தடை உத்தரவினை வழங்கியது.இ வ்வாறாக பல விடயங்களில் தமிழ் மக்களுக்கு எதிரான அரசாங்கத்தின் ஜனநாயக விரோத செயற்பாடுகளை பட்டியல் படுத்த முடியும்.என்றார்

# பிரித்தானிய பிரஜையோருவர் சடலமாக மீட்பு

**(ஏ.பி.எம்.அஸ்ஹர்)**

பொத்துவில் அருகம்பை சுற்றுலா விடுதியொன்றில் பிரித்தானிய பிரஜையொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்

பொத்துவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அருகம்பை சுற்றுலா விடுதியொன்றில் வெளிநாட்டவர் ஒருவர் நேற்று மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார் என பொத்துவில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுற்றுலா விடுதியொன்றில் தங்கியிருந்த பிரித்தானியாவைச் சேர்ந்த 43 வயதான நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவர் கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் மனைவியுடன் இலங்கைக்கு வந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹிக்கடுவை பகுதியில் வீடொன்றில் தங்கியிருந்த நிலையில் கடந்த 22ஆம் திகதி இலங்கையைச் சேர்ந்த சாரதியுடன் அவர் அருகம்பைக்கு வந்துள்ளார். கடந்த 22ஆம் திகதி இரவு வேறொரு விருந்தகத்தில் இடம்பெற்ற விருந்துபசாரத்தில் கலந்துகொண்டவர் மறுநாள் தான் தங்கியிருந்த விடுதிக்கு திரும்பியுள்ளார்.

இந்நிலையில், குறித்த நபரின் தொலைபேசி செயற்படவில்லை என அவரது மனைவி, சாரதிக்கு அறிவித்துள்ளார். இதனையடுத்து, சாரதி அவர் தங்கியிருந்த ஹோட்டலில் அறைக்கு சென்று பார்த்தபோது, அவர் உயிரிழந்திருந்தமை தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸ் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டதையடுத்து, சட்டவைத்திய அதிகாரியும் சம்பவ இடத்தை பார்வையிட்டுள்ளார். பின்னர் உயிரிழந்தவரின் சடலம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, கொவிட் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# 20 ஆவது திருத்த சட்டத்திற்கு ஆதரவாக செயற்பட்ட முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் 1000 கோடி ரூபாவை பேற உள்ளனர்

**(வி.சுகிர்தகுமார்)**

நாம் வாக்களிப்பது யாருக்கோ! உதவிகளை எதிர்பார்ப்பது யாரிடமோ! இந்த தவறைதான் தமிழ் அரசியல்வாதிகளும் தமிழ் மக்களும் தொடர்ச்சியாக செய்து வருகின்றனர் என அம்பாரை மாவட்ட பொதுஜனபெரமுன கட்சியின் அமைப்பாளர் எஸ்.சாந்தலிங்கம் தெரிவித்தார்.

ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தில்; பிரதேச செயலாளர் வி.பபாகரன் தலைமையில் இடம் பெற்ற அபிவிருத்தி தொடர்பான கூட்டமொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதனை அம்பாரை மாவட்ட பொதுஜனபெரமுன கட்சியின் அமைப்பாளர் எனும் அடிப்படையில் மிகவும் தேவதனையோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த நிலையில் அதிக சிரமத்திற்கு மத்தியிலேயே அபிவிருத்தி திட்டங்களை அமைச்சர் மூலமாக பெற்று மேற்கொண்டு வருகின்றேன்.

இதன் அடிப்படையிலேயே இவ்வருடம் கிராமத்திற்கு 20 இலட்சமும் 2020 இல் 30 இலட்சமும் ஒதுக்கீடு செய்து அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

இன்று எதிர்கட்சியிலே இருக்கும் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் நால்வர் 20 ஆவது திருத்த சட்டத்திற்கு ஆதரவாக செயற்பட்டதன் பலனாக அடுத்த வருடத்தில் ஒருவர் 1000 கோடி ரூபாவை அபிவி



ருத்திக்காக பெற உள்ளனர். ஆனால் நமது பிரதேசத்தில் ஆளுங்கட்சியில் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் இல்லாத காரணத்தால் அவற்றை இழந்திருக்கின்றோம்.

ஆனாலும் அமைச்சர் விமலவீர திசாநாயக்க அவர்கள் சிங்கள மக்களுக்கு கிடைக்கும் உதவியில் தமிழ் முஸ்லிம் மக்களுக்கு பகிர்ந்தளித்துள்ளார். ஆனாலும் எதிர்வரும் வருடத்தில் நூறு வீதமான அபிவிருத்தி திட்டங்கள்; அரசாங்காத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் என்றார். ஆகவே அம்பாரை மாவட்ட தமிழ் மக்கள் எதிர்காலத்திலாவது சிந்தித்து செயலாற்ற வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

கலந்துரையாடலில் ஆலையடிவேம்பு பிரதேச சபை தவிசாளர் த.கிரோஜாதரன்; கணக்காளர் க.பிரகஸ்பதி உள்ளிட்ட அரச அதிகாரிகள் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் இராஜாங்க அமைச்சின் இணைப்பாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# விஷேட வைத்திய நிபுணர்களுக்கான பிரியாவிடை நிகழ்வு







**(ஏ.பி.எம்.அஸ்ஹர்)**

அக்கரைப்பற்று ஆதாரவைத்தியசாலையில் கடமையாற்றி இடமாறலாகிச் செல்லும் விஷேட வைத்திய நிபுணர்களுக்கான பிரியாவிடை நிகழ்வு நேற்று முன் தினம் வைத்தியசாலையின் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் தலைவர் டாக்டர் ஏ சீ அப்துல் ரஷாக் தலைமையில் வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

வைத்திய அத்தியட்சர் டாக்டர் அசாத் எம் ஹனீபாவின் பங்குபற்றலுடன் இடம் பெற்ற இந்நிகழ்வில் வைத்தியசாலையின் விஷேட வைத்திய நிபுணர்களும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் மாற்றாலாகிச் செல்லும் பொது வைத்திய நிபுணர் டாக்டர் அமித் குலரத்ன மற்றும், சிறுபிள்ளை வைத்திய நிபுணர் டாக்டர் அர்ஷாத் அஹமட் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

இதே வேளை புதிதாக நியமனம் பெற்று வருகை தந்த வைத்திய நிபுணர்களான அஷ்ஹர்(சிறுபிள்ளை)அவர்களும், வைத்தியர் சஹீர்(மயக்கவியல்), வைத்தியர் றிப்ஷான் ஜெமீல்(பொது சத்திர சிகிச்சை) வைத்தியர் சமரநாயக்க(பொது மருத்துவம்) வைத்தியர் விராஜ் ஜயசிங்ஹ (வாய், தாடை, முக சத்திரசிகிச்சை) ஆகியோருக்கும் வரவேற்பளிக்கப்பட்டது.

இதில் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் நலன்புரிச்சங்க உறுப்பினர்கள் மற்றும் வைத்தியசாலை ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

# பரீட்சையில் சகலபாடங்களிலும் சித்தியின்மை என்றாலும் உயர்தரம் கற்று பல்கலைக்கழகம் செல்லும் புதியவாய்ப்பு!

**(வி.ரி.சகாதேவராஜா)**

இம்முறை வெளியான க.பொ.த.சாதாரண தர - 2020 பரீட்சையில் சகல பாடங்களிலும் சித்தியின்மை(W) பெற்றிருந்தாலும் உயர்தரம் கற்று பல்கலைக்கழகம் செல்லும் புதிய வாய்ப்பை கல்வியமைச்சு அறிமுகப்படுத்தியுள்ளது.

வரலாற்றில் முதல் தடவையாக இவ்வரிய வாய்ப்பை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அனைத்துப் பாடங்களிலும் W என்ற சித்தியின்மையினைப் பெற்றிருந்தாலும், உயர்தரம்( A/L) இரண்டு வருடங்கள் கற்று பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெறுவதற்கான சந்தர்ப்பத்தினை தற்போது கல்வி அமைச்சு வழங்கியுள்ளது. இதன்விபரம் பின்வருமாறு

தற்போது உள்ள.Bio, Maths, Commerce, Arts, E&Tech, B&Tech Gன்ற 6 பிரிவுகளுக்கும் மேலதிகமாக 7 ஆவது பிரிவாக தொழில் பிரிவு( Vocational Stream) ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது O/L பரீட்சைப் பெறுபேற்றினைப் பெற்ற உயர்தரத்திற்கு இணையவுள்ள 2021/2023 ஆம் ஆண்டின் மாணவர்களுக்கும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதற்கு O/L பரீட்சைப்பெறுபேறு கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது, (all F/W உம் கற்கலாம், இரண்டு வருட கற்கை நெறியாகும் ஒவ்வொரு வருடத்திலும் 3 தவணை 2 வருடத்திலும் மொத்தம் 6 தவணைகளாகும், 1ஆம் வருடத்தில் ( first year) 1 ஆம் தவணையில் ஆரம்ப அறிமுகப்பாடங்களாக 9 பாடங்கள் நடைபெறும் தொழில் பிரிவு மாணவர்கள் இப்பாடங்களை( உ+ம்:- தமிழ்,சிங்களம்,ஆங்கிலம்,தொழில்வழிகாட்டல்கள்,உளவியல்,ICT,தொழில் நுட்பம் இன்னும் பல......)கட்டாயம் எடுத்தாகவேண்டும் இதில் தெரிவு கிடையாது.

First year இல் மீதமாகவுள்ள 2 ஆம்,3 ஆம் தவணைகளில் 26 பாடங்களில்(உ+ம்:- QS, Web disining, ICT, பொறியியல், மின்னியியல், பிளம்பிங், Hotel Managment,பெண் அலங்காரம் போன்ற இன்னும் சில பாடங்கள்.......) இதில் கட்டாயம் 3 பாடங்களினை எடுத்தாக வேண்டும்.

2 ஆம் வருடம்(2nd year)

1 ஆம் வருடத்தில் 2 ஆம்,3 ஆம் தவணையில் எடுத்த மூன்று பாடங்களிலும் ஏதாவது ஒரு பாடத்தினை தெரிவு செய்து 2 ஆம் வருடம் முழுவதும் அப்பாடம் ஒன்றினையே கற்று உயர்தரப் பொதுப்பரீட்சையில் அப்பாடமொன்றிலையே பரீட்சை எழுதி பல்கலைக் கழகம் செல்ல முடியும் உதாரணமாக 2 ஆம் வருடத்தில் கிகு என்ற ஒரு பாடத்தினைக் கற்ற ஒருவர் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற முடியும்.

தற்போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால்( UGC) அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச ரீதியான பல்கலைக்கழகமொன்று நட்மலாணையில் தொழில் பிரிவு பல்கலைக்கழகமாக தொழிற்பட்டுக்கொண்டு வருகின்றது இலங்கையில் ஏலவே 40 இற்கு மேற்பட்ட பாடசாலைகளில் தொழில் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுவிட்டது என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

2020/2021 இல் சகல பல்கலைக் கழகங்களிலும் தொழில் பிரிவு பீடம் ஆரம்பிக்கப்படவுள்ளது

உயர்தரப் பொதுப்பரீட்சையில் தொழில் பிரிவு மாணவர்கள் கு தரத்தில் சித்தி பெற்றாலும் பல்கலைக்கழகந்தான் போக முடியாவிட்டாலும் NVQ Level 4 (National Vocational Qualification Level 4) இனைப் பெற்றுக்கொள்ள முடியும்.

பல்கலைக்கழகங்களில் NVQ Level 5,6,% முடித்துவிட்டு பட்டத்தினைப்( Degree) பெற்றுக்கொள்ள முடியும்.

பல்கலைக்கழகம் சென்றுதான் NVQ Level 7 இனைப் பெறவேண்டும் என்பதல்ல அம்பாறை ஹாடி தொழில் நுட்பக் கல்லூரி போன்றவற்றிடமிருந்தும் பெற்றுக்கொள்ள முடியும்.

# முற்றுப்பேறாத நிலையில் வேளியிடப்பட்ட பரீட்சைப் பேறுபேறினால் மாணவர்கள் உளரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர்

**( வவுணதீவு நிருபர்)**

அழகியல் பாடத்தின் பெறுபேறு இல்லாமல், முற்றுப்பெறாத நிலையில் வெளியிடப்பட்ட பரீட்சைப் பெறுபேறினால் மாணவர்கள் உளரீதியாக பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

என இலங்கை அரச ஆசிரியர்களின் சங்கத்தின் வடக்கு, கிழக்கு மாகாண செயலாளர்ஜீவராஜா ருபேசன் தெரிவித்தார்

மட்டக்களப்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிக்கையிலே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

உங்களுக்கு தெரியும் தினம் திடீரென கல்வி பொது சாதாரண தர பரீட்சை பெறுபேறுகளை பரீட்சைத் திணைக்களம் வெளியிட்டு இருக்கின்றது. உண்மையில் நல்ல விடயம். மாணவர்கள் அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சிறந்த செயற்பாடு அது.

இருந்தபோதிலும் இந்த காலகட்டத்தில் அழகியல் பாடங்களுக்கான பெறுபேறுகள் வெளியிடப்படவில்லை. இதனால் சில மாணவர்கள் 9அ சித்தி பெற்று தங்களுடைய வெற்றிகளை கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள் அதேவேளை சில மாணவர்கள் 8அ எடுத்துவிட்டு அழகியல் பாடத்தில் பெறு பேறு இல்லாததால் இவர்கள் 9அ என்கின்ற ஒரு விடயத்தில் தங்களுடைய வெற்றியை கொண்டாட முடியாத சூழ்நிலைக்கு தள்ளப்பட்டு இருக்கிறார்கள்.

இது மாணவர்களை உளரீதியாக பாதிக்கும் செயற்பாடு.

அழகியல் பாட பெறுபேறுகள் வெளியிடப்படாமைக்கு ஆசிரியர்களே காரணம் என்று ஆசிரியர்களை பிழையாக கூற வேண்டாம். காரணம் கொவிட் நிலமையில் இந்த ஒண்லைன் கற்றலை சுயமாக முன்வந்து நடாத்தியவர்கள் ஆசிரியர்களே. ஆனால் ஆசிரியர்கள் நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபடுகின்ற பொழுது சரியான முடிவினை பெற்றுத்தர அரசாங்கம் முன்வராமையே மாணவர்களுக்கான பூரண பெறுபேறு கிடைக்காமைக்கான காரணமாகும்.

அடுத்ததாக இந்த அழகியல் பாட பெறுபேறு வெளியிடப்படாமையானது மாணவர்கள் உயர்தரத்திற்கான பாடங்களைத் தெரிவு செய்வதில் செல்வாக்குச் செலுத்தும். அதாவது குறைந்தது 6 பாடங்களில் தேர்ச்சி



மூன்று பாடங்களில் திறமைச்சித்தி பெறாத இந்த அழகியல் பரீட்சைக்கு முகம் கொடுத்த மாணவர்களுக்கு ஒரு பிரச்சினையாக இது இருக்கும். இது தொடர்பாக அரசு மாணவர்களுக்கு உடனடியாக தீர்வை வழங்க வேண்டும்.

அடுத்து பாடசாலை ஆரம்பிப்பது தொடர்பாக கூறிக்கொண்டு இருக்கும் அரசாங்கம் 10 வயது தொடக்கம் 16 வயது வரையான மாணவர்களுக்கு தடுப்பூசி வழங்குவதாக ஒரு கதை கூறுகின்றார்கள். பின்னர் வேறு வயது அடிப்படைகளை கூறுகின்றார்கள். அதுமட்டுமின்றி இன்று கூறுகின்ற தடுப்பூசி வகை அல்ல நாளை கூறுவது. இவ்வாறு மாறிமாறி கூறிக் கொண்டிருக்கின்றார்கள். எனவே இன்றைய மாணவர்கள் நாளைய நாட்டின் செராத்துக்கள். ஆகவே மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு சரியான வைத்திய ஆலோசனைகளை பெற்று மாணவர்களுக்கு வழங்குவதற்கு எது சரியான தடுப்பூசி என்பதனை தீர்மானம் எடுத்து அதன் பின்னர் குறிப்பிட்ட மாணவர்களுக்கு மாத்திரம் வழங்காமல் நாட்டில் இருக்கின்ற அனைத்து மாணவர்களுக்கும் சமமாக இந்த தடுப்பு ஊசிகளை ஒழுங்கான திட்டத்தினூடாக அனைத்து மாணவர்களுக்கும் விரைவாக வழங்க வேண்டும்.

5000 ரூபாயை பெற தகுதி உடைய ஆசிரியர்கள் என 23ம் திகதி ஒரு கடிதத்தை வெளியிட்டார்கள். இதில் பாடசாலை காவலாளி செய்கின்ற வேலையும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

நீங்கள் என்னதான் ஆசிரியர்களை பிழையாக சித்தரித்து சேறு பூசினாலும் சமுதாயத்திற்கு தெரியும் ஆசிரியர்களின் நியாயமான நடவடிக்கை. எனவே நாங்கள் எந்த அழுத்தங்களை கொடுத்தாலும் ஒருபோதும் எங்களுடைய போராட்டத்தை நிறுத்த மாட்டோம் என்பதை நாம் அரசாங்கத்திற்கு கூறுகின்றோம். என தெரிவித்தார்

# நிலாவேளியில் சட்டவிரோத வேடிபோருட்களுடன் ஒருவர் கைது

**(திருகோணமலை ரவ்பிக் பாயிஸ்)**

திருகோணமலை நிலாவெளி பகுதியில் சட்டவிரோத வெடிபொருட்களுடன்கைது செய்யப்பட்ட சந்தேக நபரை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

திருகோணமலை நீதிமன்றத்தில் கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபரை ஆஜர்படுத்தியபோது இக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் நிலாவெளி பகுதியைச் சேர்ந்த எம்.எப். எம்.றியாஜ் (38வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர். நிலாவெளி பிரதேசத்திலிருந்து இறக்கக்கண்டி பகுதிக்கு முச்சக்கர வண்டியில் 27 டைனமைட் மற்றும் 490 டெட்டனேட்டர் குச்சிகளை கொண்டு செல்லும் போது குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாகவும் நிலாவெளி பொலிசார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேக நபர் சட்ட விரோத வெடி பொருட்களை சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் மீனவர்களுக்கு விற்பனை செய்வதற்காக கொண்டு செல்லப்பட்டதாகவும் ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.




# காணி பகிர்ந்தளிப்பில் முறுகல் நிலை போலிஸ் தலையீட்டால் இடை நிறுத்தம்





(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை பத்தாம் கட்டை -கித்துள்உத்துவ பகுதியில் காணி பகிர்ந்தளிப்பதில் மொரவெவ பிரதேச செயலக அதிகாரிகளுக்கும் பொதுமக்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த யுத்த காலத்தில் இருந்து இன்று வரைக்கும் தமது பூர்விக விவசாய நிலங்களை பராமரித்து வந்திருந்த நிலையில் மொரவெவ பிரதேச செயலகத்தின் ஊடாக வெளி மாவட்டத்தை சேர்ந்தவர்களுக்கு காணிகளை பகிர்ந்த அளிப்பதற்காக முயற்சிகளை பிரதேச செயலகம் மேற்கொண்டு வந்தது.இந்நிலையில் தாம் விவசாயம் செய்துவந்த காணிகளை வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு கொடுக்க வேண்டாம் எனக் கூறி தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தினர்.

ஆனாலும் பத்தாம் கட்டை சனசமூக நிலையத்தில் மொரவெவ பிரதேச செயலக காணி உத்தியோகத்தர்கள் வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் அழைத்து கிராம மக்களுக்குத் தெரியப்படுத்தாமல் , ஊரடங்கு அமுலில் இருக்கும் இந்த காலகட்டத்தில் சுகாதார வழிமுறைகளை பின்பற்றாமல் காணிகளை பகிர்ந்தளிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும், பத்தாம் கட்டை, மற்றும் கித்துல் உதுவ மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இருந்தபோதிலும் காணி பகிர்ந்தளிக்கும் நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்த சனசமூக நிலையத்திற்கு சென்று வெளி மாவட்டங்களைச் சேர்ந்த நபர்களுக்கு காணி வழங்குவதை நிறுத்துமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்திருந்த போதிலும், கூட்டம் நடைபெற்ற சனசமுக நிலையத்திற்குள் உள் நுழைய முயற்சித்த கிராம மக்களை பொலிஸார் உள் நுழைய விடாது தடுத்ததாகவும் இதனால் அங்கு பதட்ட நிலை ஏற்பட்டது.

ஆனாலும் குறித்த இடத்திற்கு மொரவெவ பிரதேச செயலாளர் பாத்திய விஜயந்த வருகை தந்திருந்த போதிலும் கிராம மக்கள் கோஷமிட்டு தமக்குரிய சொந்த காணிகளை வெளி மாவட்ட மக்களுக்கு வழங்க வேண்டாம் எனவும் கோரி தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தினர்.

இந்நிலையில் பொதுமக்களுக்கும் அலுவலக உத்தியோகத்தர்களுக்கும் இடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டதாகவும் தெரியவருகின்றது.இம்முறுகல் நிலையை கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் வரவழைக்கப்பட்டதுடன் குறித்த காணி பகிர்ந்தளிக்கும் நிகழ்வு இடைநிறுத்தப்பட்ட தாகவும் தெரியவருகிறது.இதன்போது பிரதேச செயலாளரினால் விவசாய காணிகளை உரிய நபர்களுக்கு வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டது.

# பாலமுனையில் வாள் வெட்டு; இருவர் படுகாயம்

(ஜவபர்கான்)

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள பாலமுனை பிரதேசத்தில் இன்று அதிகாலை இடம் பெற்ற வாள் வெட்டு சம்பவத்தில் பாலமுனை பிரதேசத்தைச் சேர்ந்த இருவர் படு காயமடைந்துள்ளனர். பாலமுனை பிரதான வீதியிலுள்ள சதாம் குறுக்கு வீதியில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

கத்திக்குத்துக்கு இலக்கான இருவரும் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது இன்னுமொருவரினால் வழி மறிக்கப்பட்டு இருவருக்கிடையில் வாய்த்தகராறு இடம் பெற்று பின்னர் கத்தி குத்து இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் பாலமுனை முகைதீன் ஜும்ஆப்பள்ளிவாயல் வீதியைச் சேர்ந்த 28 வயதுடைய ஏ.எம்.பஸ்ர் என்பவரும் பாலமுனை ஆர்.டி.எஸ். வீதியைச் சேர்ந்த எஸ்.சாகீர் என்பவரும் காயமடைந்துள்ளதாக தெரியவருகின்றது. சம்பவ இடத்துக்கு சென்ற காத்தான்குடி பொலிசார் ஆரம்பக்க விசாரணைகளை மேற் கொண்டுள்ளதுடன் தொடர்ந்தும் விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர்.

இக் கத்திகுத்து சம்பவத்தை மேற் கொண்டதாக கூறப்படும் சந்தேக நபர் தலைமறைவாகியுள்ளதாகவும் குறித்த சந்தேக நபரை காத்தான்குடி பொலிசார் தேடி வருவதாகவும் காத்தானகுடி பொலிசார் தெரிவித்தனர்.

# மக்களின் வாழ்வாதாரத்தை வலுவாக்க எல்லா தலைவர்களுக்கும் ரி.எம்.வி கட்சி அழைப்பு





(ரக்ஸனா)

மக்களின் வாழ்வாதாரத்தை வலுவாக்குவதற்காகவும், தமிழர்கள் தலைநிமிர்ந்து வாழ்வதற்காகவும், அல்லும் பகலும் பாடுபடுகின்ற எல்லா தலைவர்களையும், வரவேற்கின்றோம், ஒன்றாகப் பயணிப்போம், எமது மக்களின் எதிர் காலத்தை மாற்றுவோம், மாவட்டத்தின் வறுமையைப்போக்கி, கல்வியை உயர்துவதற்கு கடந்த தேர்தல் விஞ்ஞாபனத்தினூக எமது தலைவர் மிகவும் தெளிவாகத் தெரிவித்திருந்தார்.

என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூ.பிரசாந்தன் தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஸவின் சுபிட்சத்தின் நோக்கு செயற்திட்டத்தின் கீழ் நாடு முழுவதுவும் 40 லெட்சம் தென்னம் கன்றுகளை வழங்கி வைக்கும் நிகழ்வின் கீழ் மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுப்பற்றுப் பிரதேசத்திற்குரிய தெரிவு செய்யப்பட்ட 100 குடும்பங்களுக்கு 200 தென்னங் கன்றுகள் வழங்கி வைக்கும் நிகழ்வு சனிக்கிழமை மாலை நெல்லிக்காடு கிராமத்தில் நடைபெற்றது.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி கல்விக்காகவும், மக்களின் பொருளாதாரத்தை முன்னேற்றவும் அதிக நேரத்தைச் செலவு செய்து கொண்டிருக்கின்றது. கடந்த காலத்தில் தென்னை அபிவிருத்தியில் தேசிய உற்பத்திற்கு மட்டக்களப்பு மாவட்டம் பாரிய பங்களிப்பைச் செய்து வந்தது ஆனால் யுத்தத்தின் காரணத்தினால், தென்னை மரங்கள் மாத்திரமல்லமல் பொருளாதாரங்களும் தடைப்பட்பட்டிருந்தன. மட்டக்களப்பு மாவட்டத்தின் பொருளாதாரம் வலுப்பெற வேண்டுமாக இருந்தால் மிகவும் சிரத்தையுடன் செயற்பட வேண்டும்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்.

ஒவ்வொரு வருடமும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 40 தொடக்கம் 50 ஆயிரம் தென்னம் கன்றுகள் வழங்கப்பட்டுக் கொண்டு வரப்படுகின்றன. மட்டக்களப்பு மாவட்டத்திற்கு ஒவ்வொரு நாழும் 2 இலெட்சம் தேங்காய்கள் தேவைப்படுகின்றன. எனவே எமது மாவட்டத்திற்கு வரும் இறக்குமதிகளை நிறுத்தி இங்குள்ள வளங்களைப் பயன்படுத்த வேண்டும். வாகரை, வாழைச்சேனை, மட்டக்களப்பு நகர், ஆரையம்பதி உள்ளிட்ட பகுதிகளில் தென்னைச் செய்கைக்கு ஏற்ற பகுதிகள் உள்ளன. போரதீவுப்பற்று உள்ளிட்ட பட்டிருப்பு பிரதேசம் தென்னைச் செய்கைக்கு அப்பால் விவசாயத்திற்கு அதிகமான நிலங்கள் பயன்படுத்தப்படுகின்ற. எனவே தேங்களை உற்பத்தியில் அனைவரும் செயற்பட வேண்டும். குறிப்பாக மட்டக்களப்பிலுள்ள ஒரு தனி மனிதன் ஒரு மாத்திற்கு 5180 ரூபாவை செலவு செய்கின்றோம். தேசிய ரீதியில் ஒரு தனி மனிதன் ஒரு மாதத்திற்கு 4996 ரூபாவை செலவு செய்கின்றார், எனவே தேசியரீதியில் ஒருமனிதன் செலவு செய்வதிலும் பார்க்க 180 ரூபாவை மட்டக்களப்பிலுள்ள ஒவ்வொரு தனி மனிதனும் மேலதிகமாக செலவு செய்து கொண்டிருக்கின்றோம். மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் 6 இலெட்சம் பேர் இருக்கின்றோம். எனவே மிகவும் அதிகமான நிதியை நாம் வீணாக செலவு செய்கின்றோம். எனவே நாம் செலவுகளைச் சுருக்குவதற்காக உள்ளூர் உற்பத்திகளை அதிகரிக்க வேண்டும்.

கிழக்கிலுள்ள வளங்களை கிழக்கிலுள்ள மக்கள் பயன்படுத்த வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம். எனவே எமது மாவட்டத்தின் வளங்களைப் பயன்படுத்துவதற்று முன்வருமாறு எமது இளைஞர் யுவதிகளுக்கு நாங்கள் பகிரங்கமாக அழைப்பு விடுகின்றோம். அதற்குரிய ஏற்பாடுகளை செய்து கொடுக்க எமது தலைவர் தயாராக இருக்கின்றோம்.

நாளாந்தமம் எல்லைககளையும், காணிகளையும் பிடிக்கின்றார்கள் என ஆர்ப்பாட்டங்கள் செய்வதுவும். வீர வசனங்கள் பேசுவதும் அரசியல் அல்ல. அங்கிருக்கின்ற வளங்களப் பயன்படுத்துகின்றபோது அதிலிருந்து பொருளாதாரத்தைப் பெறுவதோடு, நிலங்களையும் பாதுகாத்துக் கொள்ளவும் முடியும். இதனைவிடுத்து எதனைச் செய்தாலும் பிழை என விமர்சனம் செய்வதாகத் தான் சிலர் இருக்கின்றார்கள். இவ்வாறு அனைத்திலும் பிழை பிடிக்கும் சில தமிழ் தேசியத்தின் கடந்தகாலப் போக்குத்தான் தற்போது தமிழ் மக்களை நடுத்தெருவில் நிறுத்தியிருக்கின்றது. இதன் காரணமாகத் தான், அரசியல் அதிகாரத்திற்காக மாற்று சமூகத்திடம், கையேந்த வேண்டிய சூழலை ஏற்படுத்தியிருக்கின்றது. எமது மக்கள் எல்லோருக்கும் வாக்களிக்கின்ற போது ஏதாவது நல்லது நடக்குமா என எதிர்பார்த்து வாக்களித்தார்கள். அவ்வாறு வாக்குப்பபெற்ற எமது தலைவர் சிவனேசதுரை சந்திரகாந்தன் அவர்கள் மக்களுக்கு தன்னாலான சேவைகளை வழங்கிக் கொண்டிருக்கின்றார்.

இதன்போது சட்டத்தரணி திருமதி.மங்களேஸ்வரி சங்கர், போரதீவுப்பற்று பிரதேச தென்னை அபிவிருத்தி உத்தியோகஸ்த்தர் சாமிக்க ராஜபக்ஸ, மற்றும் பயனாளிகள் உள்ளிட்டபலரும் இதன் போது கலந்து கொண்டிருந்தனர்.

# 40 மாணவிகளில் 33 பேர் உயர்தப் பிரிவுகளில் கல்வி கற்க தகுதி

(பைஷல் இஸ்மாயில்)

தற்போது வெளியான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சை பெறுபேறுகளின்படி பாலமுனை அல்ஹிதாயா மகளிர் கல்லூரியிலிருந்து கடந்த ஆண்டு கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றிய 40 மாணவிகளில் 33 பேர் உயர்தப் பிரிவுகளில் கல்வி கற்க தகுதி பெற்றுள்ளதாக பாடசாலை அதிபர் எஸ்.எம்.சாஹிர் ஹுஸையின் தெரிவித்தார்

கடந்த வருடம் (2020) பாடசாலையில் கல்விப் பொதுத் தராதர பரீட்சைக்கு தோற்றிய பாடசாலை மாணவிகளூல் எம்.எம்.பாத்திமா சிம்றா எனும் மாணவி அனைத்து பாடங்களிலும் 09ஏ சித்திகளை பெற்று சாதனை படைத்துள்ளதுடன். எம்.என்.சாறா சமி 8ஏ, 01பி , சித்திகளைப் பெற்றும், எம்.என். அம்னா. எம்.ஜே.தீனா, எப்.எப்.சப்றின் , எச்.எம்.எப். நப்லா ஆகியோர் 7ஏ. 2பி சித்திகளைப் பெற்றும் , யூ.எல். எப்.அதீபா 7ஏ.1பி.1சீ, எம்.ஏ.எப்.ஜினா 6ஏ. 3பி, எம்.என்.றீஸ்மா 5ஏ.3பி.1சீ, எம்.என்.எப்.சஸ்மினா, எம்.ஐ.எப். ஹமாமா 4ஏ. 4பி, 1சீ, எம்.ஏ.ஆர்.றீசா 4ஏ.2பி.3சீ சித்திகளை பெற்றும் பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

இதே வேளை இம்மாணவர்கள் சித்திபெறுவதற்கு கற்பித்து வழிகாட்டிய அனைத்து ஆசிரியர்களுக்கும் , பிரதி அதிபர், உதவி அதிபர்கள், வலயத் தலைவர்கள், பாடசாலையின் முன்னேற்றத்திற்கு பல வழிகளிலும் உதவி புரிந்த பாடசாலை சமூகத்துக்கும் நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவிப்பதாக அதிபார் மேலும் தெரிவித்தார்.

# ஓட்டமாவடி மஜ்மா நகரில் உடல்கள் நல்லடக்கம் மூவாயிரத்தை தாண்டியது

( எச்.எம்.எம்.பர்ஸான்)

கொரோனா தொற்றினால் மரணிக்கும் நபர்களை நல்லடக்கம் செய்யும் ஓட்டமாவடி - மஜ்மா நகர் மையவாடியில் சனிக்கிழமை நல்லடக்கம் செய்யப்பட்ட 11 உடல்களுடன் மொத்த எண்ணிக்கை 3003 ஆக உயர்ந்துள்ளது என்று ஓட்டமாவடி பிரதேசசபை தவிசாளர் ஏ.எம்.நௌபர் தெரிவித்தார்.

கடந்த மாதத்தை ஒப்பிடும்போது இம்மாதம் குறைந்த அளவிலான உடல்கள் அங்கு நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன.

நாட்டிலுள்ள அனைத்து இன மக்களின் உடல்களுடன் மூன்று வெளிநாட்டுப் பிரஜைகளின் உடல்களும் அங்கு நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன என்று தவிசாளர் மேலும் தெரிவித்தார்.

# கிண்ணியாவின் பல பிரதேசங்களில் இலவச குடிநீர் வழங்கும் நிகழ்வு

(ஹஸ்பர் ஏ ஹலீம்)

ஜனநாயக இடதுசாரி முன்னணியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் றாஸிக் ரியாஸ்தீனினால் 300 இலவச குடிநீர் இணைப்புகளுக்கான இணைப்பை பெறுவதற்கான கட்டண ரிசீட்கள் வழங்கும் நிகழ்வு கிண்ணியாவில் குறிஞ்சாக்கேணி, பூவரசந்தீவு, சூரங்கள் மற்றும் வான்எல ஆகிய பிரதேசங்களில் நடைபெற்றன.

இந் நிகழ்வுகளில் கிண்ணியா பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளர் பஹீமா றிஸ்வி, கிண்ணியா பொலிஸ் பிரதிபொருப்பாளரும் சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகருமான நிஹார் ஸலாம், கிண்ணியா பிரதேச சபை உறுப்பினர்களான கன்சுலா மற்றும் ஜிப்ரி ஆகியோருடன் ஜனநாயக



இடதுசாரி முன்னணியின் மாவட்ட அமைப்பாளர் றாஸிக் ரியாஸ்தீன், ஜனநாயக இடதுசாரி முன்னணியின் கிண்ணியாவுக்கான மகளிர் அணித் தலைவி ஜரீனா ஆகியோருடன் பெண்கள் மனித உரிமை அமைப்பின் தலைவியும் சமூக சேவகியுமான நளீமா, ஊடகவியலாளர் இர்ஷாத் இமாமுத்தீன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# திருகோணமலை சாஹிரா தேசிய கல்லூரியில் 49 மாணவர்கள் உயர் தரத்திற்கு தகுதி

## 4 மாணவர்கள் 9 ஏ சித்தி

(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை சாஹிரா தேசிய கல்லூரியில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையில் 50 மாணவர்களில் நாற்பத்தி ஒன்பது மாணவர்கள் உயர் தரத்திற்கு தகுதி பெற்று சாதனை படைத்துள்ளதாக கல்லூரியின் அதிபர் ஏ.எஸ் அலி சப்ரி அவர்கள் தெரிவித்தார்

இவர்களுள் 03 மாணவிகள் உட்பட ஒரு மாணவன் 9ஏ சித்திகளை பெற்று கல்லூரி வரலாற்றில் சாதனை படைத்துள்ளதாக தெரிவித்த கல்லூரியின் அதிபர் மேலும் 5 பாடங்களுக்கு மேலாக ஏ சித்திகளை பெற்ற 13 மாணவர்கள் அடங்குவதாகவும் தெரிவித்தார்

நாட்டில் ஏற்பட்டுள்ள கோவிட் - 19 கொரோனா அச்சுறுத்தல் சூழ்நிலையில் எம்.ஏ.எம்.அன்வருள் அப்சான், கே.சீமா சப்நப், எம்.என்.பாத்திமா நப்ளா மற்றும் எஸ்.பாத்திமா நஸ்ரின் ஆகிய மாணவ மாணவிகளே இவ்வாறு 9ஏ சித்திகளை அடைந்துள்ளதாக சுட்டிக்காட்டிய கல்லூரியின் அதிபர்

இவ்வாறான அடைவு மட்டத்தை அடைந்திருப்பது மிகவும் பாராட்டத்தக்க விடயம் என்றும் இவ்வாறன அடைவு மட்டத்திற்கு அயராது பாடுபட்ட கல்லூரியின் ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்வதாகவும் உயர்தரத்தில் கல்வி கற்க தகுதி பெற்ற அனைத்து மாணவர்களுக்கும் கல்லூரியின் அதிபர் அலி சப்ரி தனது வாழ்த்தினையும் தெரிவித்தார்.





# திருமலையில் வறுமையிலும் தினமும் 12 கிலோமீற்றர் பயணித்து பாடசாலை செல்லும் மாணவி வரலாற்று சாதனை!!



**(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)**

2020ம் ஆண்டிற்கான க.பொ.த சாதாரண தர பெறுபேறுகள் கடந்த வெள்ளிக்கிழமை (24) வெளியாகிய நிலையில் திருகோணமலை பன்குளம் ஔவை நகர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவி சுரேஷ் குமார் கோபிசா 7A,B மற்றும் C சித்திகளை பெற்று பாடசாலைக்கு மாற்றுமல்லாது பன்குளம் கிராமத்திற்கே பெருமை சேர்த்துள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தின் மிகவும் பின் தங்கிய கிராமமான பன்குளம் கிராமத்திலிருந்து தினமும் துவிச்சக்கர வண்டியில் 12 கிலோமீற்றருக்கும் அதிகமான தூரம் பயணம் செய்து இம் மாணவி இச் சாதனையை படைத்துள்ளார்.

தந்தையை இழந்த சுரேஷ் குமார் கோபிசா மிகவும் வறுமையான குடும்பத்தில் ஒரு மூத்த சகோதரனுடன் பிறந்தவர் கோபிசாவின் அம்மா வீட்டில் கோழி வளர்ப்பு போன்ற கைத்தொழிலினை வாழ்வாதாரமாக கொண்டு வரும் வருமானத்தில் மிகவும் சிரமங்களுக்கு மத்தியிலேயே தனது பிள்ளைகளை பாடசாலைக்கு கல்விகற்க அனுப்பி வருகின்றார்.

வீட்டில் ஒரே பெண்பிள்ளையான கோபிசா ஒரு ஆஸ்துமா நோயினால் அவதிப்படும் ஒரு நோயாளியும் கூட, வீட்டு வேலைகளையும் கவனித்தவராக தனது பொழுபோக்காக வீட்டுத்தோட்டம்,வாத்து வளர்ப்பு என இருந்தவர் தனக்கென நேரத்தினை ஒதுக்கி அன்றாட பாடங்களை படித்து இந்நிலையை அடைந்துள்ளார்

தனது விஞ்ஞான பாட ஆசிரியரின் வழிக்காட்டலிலும் தனது குடும்பத்தில் நிலைமையினையும் கருத்திற் கொண்டு கோபிசாவின் தாயின் நம்பிகைக்கு பாத்திரமாக பன்குள கிராமத்தின் முதன் முதல் ஏழு படங்களில் ஏ சித்தியினை பெற்ற மனைவியாக வரலாற்றில் இடம் பிடித்துள்ளதாக அவரது விஞ்ஞான பாட ஆசிரியர் நெகிழ்ச்சி கொண்டார் .

இருப்பினும் வறுமை மற்றும் பல்வேறு சிரமங்களை தாண்டி பிரேத்தியேக வகுப்புகள் ஏதும் இல்லாமல் கோபிசா இச் சாதனையை படைத்துள்ளார். சாதனைக்கு வறுமை ஒரு தடையல்ல என்று நிரூபித்துள்ள இம் மாணவி அனைத்து மாணவர்களுக்கும் ஒரு எடுத்துக்காட்டு என்றால் மிகையல்ல.

மேலும் கோபிசா உயர்தரத்தில் உயிரியல் விஞ்ஞான பிரிவினை கற்பதற்க்கு தெரிவு செய்துள்ளதாகவும் தனது எதிர்கால இலட்சியத்தினை வைத்திய துறையாக தேர்தெடுத்திருப்பதாகவும் இதன்போது தெரிவித்தார் . தனக்கு தடையாக இருப்பது பன்குளம் பிரதேசத்திலிருந்து உயர்தரம் கற்ப்பதற்கு தமிழ் பாடசாலைகள் இல்லாமையினால் 35 கிலோமீற்றர் தூரத்தில் திருகோணமலை நகர் பாடசாலை ஒன்றுக்கு செல்வதே சரியான தீர்வு எனவே இவரின் எதிர்காலம் சற்று சிந்திக்கவேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்படுமோ என கோபிசாவின் தாயின் யோசனையாக இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது .

வைத்தியராவது என இலட்சியம் நிறைவேறுமா?. அரச,அரச சார்பற்ற தனியார் தொன்று நிறுவனங்கள் மற்றும் தனவந்தர்களின் பார்வை இவர் பக்கம் திரும்புமா?. பன்குள கிராமத்தில் இவ்வாறான பல கோபிசாக்கள் இருக்கலாம் அவர்களின் படிப்பு விடயம் எவ்வாறு இருக்குமோ?. வறுமை மற்றும் தூரம் ஒரு மாணவியின் எதிர்காலத்தை நிர்ணயிக்குமா?.





**இந்த கட்டுரையை காணொலி வடிவில் காண ஸ்கேன் செய்யுங்கள்**

# தமிழ்த் தேசியப் பரப்பில் செயல்படும் அனைவரும் சரியான தீர்மானம் எடுக்கும் சந்தியில் நிற்கின்றோம்

தமிழ்த் தேசியப் பரப்பில் செயல்படும் அனைவரும் சரியான தீர்மானம் எடுக்கும் சந்தியில் நிற்கின்றோம். அதற்கான வாய்ப்பை ஜனாதிபதியும், இந்த அரசும், இலங்கை பாதுகாப்புத் தரப்பும் எமக்கு வழங்குகின்றார்கள். அதனை சரியாகப் பயன்படுத்துவது எமது கரங்களில் உள்ளது. இந்த வாய்ப்புமிகு தருணத்தில் தமிழ்த் தேசியப் பரப்பில் பயணிக்கும் அனைவரும் தமிழ் மக்களுக்கு சரியான வழித்தடத்தைக் காண்பிக்க வேண்டும் என்று தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான கோவிந்தன் கருணாகரம் (ஜனா) இலங்கையில் ஏற்பட்டிருக்கும் அரசியல் சூழ் நிலை குறித்தும் தமிழ்த் தேசியத் தரப்பினரின் ஒற்றுமையான செயற்பாட்டின் தேவை குறித்தும் சனிக்கிழமை கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் ,

தமிழ்த் தேசியப் பரப்பில் செயல்படும் அனைவரும் சரியான தீர்மானம் எடுக்கும் சந்தியில் இன்று நிற்கின்றனர். வரலாற்றில் தோல்வியடைந்த இனமாக தொடர்ந்தும் எமது வரலாற்றை பதிவு செய்வதா, இல்லை வரலாற்றில் இருந்து பெற்ற அனுபவத்தின் மூலம் எமது தமிழ்த் தேசிய செல்நெறியினை சரியான வழித்தடத்தில் கொண்டு சென்று எமது இலக்கினை அடைய நாம் செயல்பட்டோம் என்று பதிவு செய்வதா என்பதை தீர்மானிக்கும் சரியான சந்தியில் இன்று நிற்கின்றோம். அதற்கான வாய்ப்பை ஜனாதிபதியும் ,இந்த அரசும் ,இலங்கை பாதுகாப்புத் தரப்பும் எமக்கு வழங்குகின்றார்கள். அதனை சரியாகப் பயன்படுத்துவது எமது கரங்களில் உள்ளது.

இந்த வாய்ப்புமிகு தருணத்தில் தமிழ்த் தேசியப் பரப்பில் பயணிக்கும் அனைவரும் தமிழ் மக்களுக்கு சரியான வழித்தடத்தைக் காண்பிக்க வேண்டும் .



தனிப்பட்ட அமைப்பு நலன், தனிப்பட்ட கட்சி நலன் , தனிப்பட்ட நபர் சார்ந்த நலன் எவையும் இது தொடர்பான தீர்மானம் எடுக்கும்போது கருத்தில் கொள்ளப்படாது தமிழ்த் தேசிய நலன் மட்டுமே கருத்தில் கொள்ளப்படவேண்டும். ஆனால் நிகழ்வுகளும் நடத்தைகளும் இதற்கு முரணாகவே பளிச்சிடுகிறது.

தமிழ்த் தேசியத்திற்காக ஒருமித்து போராடிய இயக்கங்கள் தமக்கிடையே பிளவுபட்டு மோதுண்டு பின்னர் ஒருங்கிணைந்து பின்னர் பிளவுண்ட வரலாறு எமக்குரியது. அதன் பின்பும் கூட ஜனநாயக அரசியல் பரப்பில் தமிழ்த் தேசியத்தின் அவசியம் உணரப்பட்டு முரண்பட்ட அனைவரையும் இணக்கப்பாட்டுக்கு வரவைத்து தமிழ் ஒற்றுமை வலுவாக்கப்பட்டது. ஆனால் இந்த ஒற்றுமை, இந்த இணைப்பு சிலரது தனிப்பட்ட கட்சி, சிலரது தனிப்பட்ட செல்வாக்கு, சிலரது தனிப்பட்ட அபிலாசைகளுக்கு தாரை வார்க்கப்படக்கூடாது என்பது தமிழ்த் தேசியத்தை நேசித்த, நேசிக்கும் என்போன்றவர்களின் அவாவும் ஆதங்கமும் ஆகும்.

இது எவர் மீதும் வாசிக்கும் குற்றப்பத்திரிகை அல்ல. இன்றைய வாய்ப்பினை எமக்காக மாற்றிக் கொள்ளவேண்டும். அதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். நமது தனிப்பட்ட கட்சி, தனிப்பட்ட கூட்டு, தனிப்பட்ட செல்வாக்கை பாராளுமன்ற, மாகாண சபைத் தேர்தல்களில் தேவையேற்படின் காட்டுவோம். அது ஏற்படுத்தும் பாதிப்பினைவிட இன்று நாம் ஒருமித்து பயணிக்காவிடில் ஏற்படும் பாதிப்பு எமக்கும் எம் இனத்திற்கும் கடந்த ஆறு தசாப்த கால எம் அரசியல் முனைப்புக்களையும் கபளிகரம் செய்து மீண்டும் பேரினவாதிகளின் கால்களில் மண்டியிடவைக்கும் என்பது மட்டும் திண்ணம் என்று என் அரசியல் அறிவு சொல்கிறது. என்மன ஆதங்கமும் இதுவே!. புரிவதும் புரிந்தும் தன்னிலையில் மாறாது தமிழ்த் தேசியத்தை அழிப்பதும், தமிழ்த் தேசியப் பரப்பில் ஈடுபடும் அனைவருக்கும் பொருந்தும் . இது உங்கள் அனைவருக்கும் சமர்ப்பணம்.


நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com


SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
S TRAVEL
Flugtickets | Hotels | Reiseversichenungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59


உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com


"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206


SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28
வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்
10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க
இருக்கும் வீட்டை வைத்து
இன்னொரு வீட்டை வாங்க...
வீடு வாங்க, விற்க, கட்ட, திருத்த...
வீடு வாங்குவதற்கான
ஆயுட்காப்புறுதி
Architect வேலைகள்
இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.
» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி


கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு
துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்
வெளிநாட்டில் இருக்கும் உங்கள்
உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள்
மற்றும் ஆவணங்களை துரித
வேகத்தில் உரிய முகவரியில்
கொண்டு சேர்க்க
இன்றே நாடுங்கள்
TA parcel.lk
LOCAL & INTERNATIONAL COURIER SERVICE
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK
துரித வேகம். London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service
உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. All Countries
பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. 100% Insured
365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. 365 Days 24 Hours Service
உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். Door to Door Delivery
இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. Online Tracking System
சிறந்த பொதியாக்கம். Quality Packing
நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.
இவ்வாறான நம்பகதன்மைகளுடன்
உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை
கொண்டு சேர்க்கின்றோம்.
எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள்
அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும்
பெறுமதியான பரிசில்கள் மற்றும்
அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.
அரச மற்றும் தனியார்
நிறுவனங்களுக்கு விசேட
விலைக்கழிவு.
வெளிநாடுகளில் இருந்து
அனுப்பப்படும் பொதிகளையும்
இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651


GRÜNAU 1
# ITALY # INDIAN # THAI # SRILANKA
Fruhstuck / Mittagessen / Abendessen
Öffnungszeiten
Montag - Sonntag
08:00AM - 22:00PM
ORDER NOW
TANDOORI
FISH SPL
BBQ GRILL
BIRIYANI SPL
CURRY GERICHTE
MIX SABJI DESERTSLIEF
CALL for FREE DELIVERY
044 260 2222 079 563 2222
Meierwissenstr 58, 8064 Zürich
www.grunau1restaurant.com